# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 14 பிப்ரவரி - 2001 இதழ் - 2



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபையார்,**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு, இந்தியா

✆ 04257 - 20030 e-mail : kangayamcofc@eth.net

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை(112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு,உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தங்கள் அனுப்பப் படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ.20/-

*தொடர்பு முகவரி:*


**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா


குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | நிறுவன ஆசிரியர் உரை | 01 |
| 2. | **பட்டமளிப்பு விழா அழைப்பிதழ்** | 07 |
| 3. | நம்மை கட்டுப்படுத்தும் கட்டளை ஏது? | 08 |
| 4. | பெண்கள் பகுதி | 11 |
| 5. | சாமுவேல் ஒரு கண்ணோட்டம் | 15 |
| 6. | வாலிபர் பகுதி | 16 |
| 7. | வேதாகமக் கேள்வி- பதில் | 19 |
| 8. | வெளிப்படுத்தின விசேஷம் | 21 |
| 9 | தெரிந்து கொள்ளுங்கள் | 27 |
| 10. | நடப்புச் செய்திகள் | 31 |
| 11. | விளையாட்டுச் செய்திகள் | 32 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

Editor
*S. RAJANAYAGAM*

Honorary Editor
*J.C. CHOATE*

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol .14 February- 2001 Issue - 2**


*ஆசிரியவுரை*

# உண்மைக் கிறிஸ்தவம் பிளவுபடாதது

கார் ஒன்று இந்தப் பக்கமாக வந்ததா? பதட்டமாகக் கேட்டார் முதியவர் ஒருவர்.பதில் வரவில்லை. மாறாக அங்கிருந்து கேள்விகள் தான் வந்தன. காரா? என்ன கார்? மாருதியா? அம்பாஸிடரா? பியட்டா? இது இளைஞன் ஒருவனின் கேள்விக் கணைகள். " அதெல்லாம் இல்லை. கார் அவ்வளவு தான்" என்று சற்று எரிச்சலுடன் சொன்னார் பெரியவர்..

"என்னையா கோபப்படுகிறீர்? என்ன கார் என்று சொல்லாமல் கார், கார் என்றால் எப்படிச் சொல்லுவது"? எத்தனையோ ரகமான கார்கள் வருகின்றன, போகின்றன.என்ன கார் என்று சொன்னால் தானே சரியாகப் பதில் தரமுடியும்? "இது இளைஞனின் சமாதான விளக்கம்".

இருவருமே தங்கள் தங்கள் சூழ்நிலையில் நியாயமாகத் தான் நடந்து கொண்டார்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது.முதல் முதலில் கார்கள் மார்க்கெட்டுக்கு வந்தபோது எல்லாக் கார்களும், ஒரே மாதிரியாகத் தான் இருந்தன. அந்த நாட்களில் கார் என்றால் போதும், மக்கள் புரிந்து கொள்வார்கள்.இன்று அப்படியல்ல, தற்காலத்தில் புதிய புதிய கம்பெனிகள் புதுப்புதுரகமான கார்கள் உற்பத்தி செய்து மார்க்கெட்டுக்குள் விடுகின்றனர். ஆகவே இளைஞன் பதில் கொடுக்க முடியாமல் தடுமாறினான். அது அவனுடைய குற்றமன்று.

கிறிஸ்துவின் சபை விஷயத்திலும் இதுவே நிலைமை.அன்றொரு நாள், நடுத்தர வயது உள்ளவர், பார்த்தால் படித்து உத்தியோகம் பார்ப்பவர் போல் தோற்றம். நீங்கள் எந்தச் சபையைச் சேர்ந்தவர் என்று கேட்டார்.

நான் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவன் என்று மரியாதையாகத் தான் சொன்னேன்.அவருக்கு கொஞ்சம் வருத்தம். அதைக் காட்டிக் கொள்ளாமல் அதுசரி ஐயா, எந்த ஐக்கியம் என்றுதான் கேட்டேன் என்றார். ஐக்கியம் அது இது எல்லாம் இல்லை. கிறிஸ்துவின் சபை, அவ்வளவுதான் என்றேன். அப்படியானால் நாங்கள் எல்லாம் சாத்தான் சபைகளா? என்று கோபித்துக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விட்டார்.

பரிசுத்த வேதாகமத்தில் பல சபைகளைப் பற்றிய பிரஸ்தாபம் கிடையாது. கிறிஸ்துவைப் பின்பற்றுகிற மக்களிடையேயும் வேற்றுமை கிடையாது. ஒரே சபை. (எபே.4:4) கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு கீழ்ப்படிந்தவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் (அப்.11:26)

ஆனால், அந்த நிலைமை மாறி வீதிக்கொரு சபை, ஆளுக்கொரு உபதேசம் என்ற நிலை வந்துவிட்டது.ஆகவேதான் அந்த மனிதர் கோபப்பட்டுக் கொண்டார்.அது தற்காலத்தில் வாழுகின்ற நம்முடைய குற்றமன்று.ஏனெனில் நாம் இந்த பிரிவினை வாதத்தை உருவாக்கவில்லை. பல சபைகள் தோன்றி இயங்கிக் கொண்டிருக்கிற காலத்தில் நாம் பிறந்திருக்கிறோம். பிரிவினைவாதத்தை நாம் நம்முடைய முன்னோர்களிடமிருந்து பூர்வீக சொத்தாக பெற்றுக் கொண்டிருக்கி றோம். விரும்புகிறோமோ, இல்லையோ நாம் தோன்றுவதற்கு முன்னரே பல சபைகள் என்ற நிலை நன்குவேர்விட்டு தழைத்து நிற்கிறது.அதன் நிழலில் நாம் அண்டிக்கொண்டிருக்கிறோம். தந்தையும், தாத்தாவும் ஏற்றுக்கொண்டனர். நாமும் பின்பற்றுகிறோம்.

இப்படிப்பட்ட காரணங்களால் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஒரே சபை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்ப்பது சற்று கடினமாகத் தோன்றுகிறது. இருப்பினும் முயன்று உண்மையைக் கண்டு பிடிப்போம். ஏனெனில் எல்லாவற் றையும் சோதித்துப்பார்க்கும் படியும், வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படியும் நமக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறதே.(1.தெச.5:21; யோவான் 5:39)

இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்று வாசிக்கிறோம். (அப்.2:47) எந்த சபையில்? சவுல் சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான் என்று (அப்.8:3ல்) வாசிக்கிறோம். எந்த சபையை? எப்படி கார் கண்டுபிடித்த நாட்களில் கார் என்றால் மக்கள் எளிதில் புரிந்து கொண்டார்களோ அவ்வாறே சபை என்று வேதம் குறிப்பிடும்போது ஒரே சபையைத்தான் குறிப்பிடுகிறது என்று கொள்ளவேண்டும். இயேசு என் சபையைக் கட்டுவேன் என்று ஒருமையில் தான் சொன்னார் (மத். 16:18)அதாவது நான் ''கிறிஸ்தவத்தை ஸ்தாபிப்பேன்'' என்றார். இயேசு சபையில் அன்பு கூர்ந்து... தம்மைத்தாமே அதற்கு ஒப்புக்கொடுத்தார் '' என்று வாசிக்கிறோம் (எபே. 5:25-27) வேதாகமத்தில் சபை என்றால் அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் என்று பொருள். உதாரணமாக இஸ்ரவேலரை ''சபை'' என்று வேதாகமம் குறிப்பிடுகிறது.

ஏனெனில் தேவன் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து விடுதலையாக்கி அழைத்துக் கொண்டார். (அப்7:38) சவுல் சபையைத் துன்புறுத்தினான் என்று சொல்லும்போது. ஆண்களையும், பெண்களையும் துன்புறுத்தினான் என்றே பொருள்.(அப்.8:1-3) சபை என்பது ஆகுபெயர்; சபையிலுள்ள மக்களையே குறிக்கும். கட்டிடத்தைக் குறிக்காது. சபை என்பது தேவனுடைய ஆவிக்குரிய மாளிகை.அது ஜீவனுள்ள கற்களால் ஆனது (1.பேதுரு 2:5) ஆகவே சபை என்றால் கிறிஸ்தவர்களையே குறிக்கும்.

மேலும், அப்போஸ்தலன் பவுல் அப்.20:28ல் கூறும்போது இயேசு தம்முடைய இரத்தத்தை விலைக் கிரயமாகக் கொடுத்து சபையை வாங்கினார் என்று குறிப்பிடுகிறார்.ஆகவே யார் எல்லாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் சபையில் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள்.ஆகவே இயேசுவின் இரத்தத்தால் கிரயமாகக் கொள்ளப்பட்ட அழைக்கப்பட்ட இரட்சிக்கப்பட்ட மக்கள் அனைவரும் கிறிஸ்தவர்களே. இப்படி தேவன் அழைக்கப்பட்ட மக்களை, கிறிஸ்துவின் இராஜ்ஜியத்துக்குட்படுத்தியிருக்கிறார் (கொலோ.1:13) (சபைக்கு இன்னொரு பெயர் இராஜ்ஜியம் என்று அறிக) எவ்வாறு ஒரு குழந்தை பிறந்தால் தன்னுடைய தகப்பனாருடைய குடும்பத்துக்குள் சேர்த்துக் கொள்ளப்படுகிறதோ அதே போன்று மக்கள் ஆவியினாலும், ஜலத்தினாலும் பிறக்கும்போது, கிறிஸ்துவின் இராஜ்ஜியமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.(யோவா.3:3-5) சபைக்கு இன்னும் ஒரு பெயர் கிறிஸ்துவின் சரீரம். (கொலே.1:18)

மக்கள் ஆவியானவரின் உபதேசங்களைக் கேட்டு (வேத வசனங்களை) அவருடைய சரீரமாகிய சபைக்குள் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். (1.கொரி.12:13) வேதாகமத்தின்படி கிறிஸ்தவர்கள் ஆகிறார்கள். குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் - இராஜ்ஜியத்தின் பிள்ளைகளாகிறார்கள் என்று பொருள்.எந்த சபை என்ற பிரச்சினைக்கே இடம் இல்லை. ஏனெனில் வேதாகமத்தில் சபை என்பது ஒன்றுதான்.ஆனால் இன்றைய உலகில் பல சபைகள் அவதாரம் எடுத்திருப்பதற்கு யார் காரணம்? ஒன்றாக இருந்த சபை இப்படி சின்னாபின்னமானது எப்படி? அதற்கு வேதாகமமே பதில் கூறுகிறது. வாசித்துப் பார்ப்போம்.

**I. விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் :-** ***1.தீமோ.4:1***

விசுவாசம் என்பதை ஆங்கில வேதாகமம் 'The faith'' என்று குறிப்பிடுகிறது. அப். 6:7,13:8,14:22 கலா.1:23, அதாவது விசுவாசம் என்பது ஒருமை.(எபே.4:5)

**II. சுவிசேஷத்தைப் புரட்டுவார்கள் :-*கலா.1:7***

சுவிசேஷப்புரட்டு அபாயகரமானது. ஏனெனில் சுவிசேஷமே கிறிஸ்தவத்தின் இதயம். இதயத்துக்குக் கேடுவந்தால் சரீரத்துக்கு ஆபத்து. அப்படிப்பட்ட புரட்டில் ஈடுபடுகிறவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும்,

வானத்தில் இருந்துவந்த தேவதூதனானாலும் சபிக்கப்பட்டவர்கள் என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது.(கலா.1:8-9) ஏனெனில் கிறிஸ்தவம் மாசுபடாமல் காக்கப்பட வேண்டும் என்பதே தேவசித்தம்.

## III. ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்:- *2.தீமோ.4:3*

ஜென்ம சுபாவமுள்ள மாந்தர்களின் எண்ணம் தேவசித்தத்துக்கு எதிர்த்திசையில் இயங்கும் தன்மையுள்ளது. (கலா.5:17) ஆகவே தேவ ஆலோசனைகள் பல மனிதர்களுக்குப் பிடிக்காது. அதனால் தேவன் அவர்கள் பொய்யை விசுவாசிக்கும் ஆவியை அவர்களுக்குள் அனுப்புவார். 2.தெச.2:10-12.

இப்படியாக மனிதர்கள் தூயக் கிறிஸ்தவத்தின் தன்மையைக் கறைப்படுத்தி கட்டுக் கதைகளை விரும்பி ஏற்றுக் கொண்டார்கள்.

## IV. கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு விரோதமாக பிரிவினைகளையும் இடறல் களையும் உண்டாக்குவார்கள்:-

அப்போஸ்தலன் பவுல் ரோம் நகரில் உள்ள சபையாருக்கு "சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு விரோதமாக பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டுவிலக வேண்டும்" என்று புத்தி சொல்லுகிறார். (ரோமர்.16:17) அப்போஸ்தலன் யோவான் கூட கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனையுடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமல் இருந்தால் அவனை உங்கள் வீட்டில் ஏற்றுக் கொள்ளாமலும் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்என்றார்.(2. யோவான் 9-11) இருந்தபோதிலும் தற்காலத்தில் மனிதர்கள் கிறிஸ்துவின் தூய உபதேசத்தை உதறித் தள்ளிவிட்டு தங்கள் மனம்போல் நடக்கின்றனர்.

## V. முதலாம் நூற்றாண்டு சபைக்குள் மாம்ச சிந்தையுள்ள மனிதர்கள் பிரிவினைவாதத்தைக் கொண்டு வந்து புகுத்தினர்:-

பவுல் கொரிந்து சபையாருக்கு, கருத்து ஒருமித்தவர்களாகவும் பிரிவினையற்றவர்களாகவும் ஒருமனமும் ஒரு சிந்தனையுள்ளவர்களாக சீர் பொருந்தியிருக்க வேண்டும் என்று புத்தி சொல்லுகிறார்; (1.கொரி. 1:10) ஆனால் பிரிவினை மார்க்கம் உருவானதே இங்கேதான் என்று எண்ணும்படி நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன் நான் கேபாவைச் சேர்ந்தவன், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன் என்றும் தனித்தனி முத்திரை குத்திக்கொண்டு போர்க்கோலம் பூண்டனர்.(1.கொரி.1:12) இந்தப் பிரிவினை வாதம், இயேசு கிறிஸ்துவும், பிதாவும் ஒன்றாயிருக்கிறது போல அவரைத் தொழுகிற மக்கள்

அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற இயேசுவின் ஜெபத்தை அர்த்தமற்றதாக்கிவிட்டது.(யோவான்17:20,21) அப்போஸ்தலன் பவுல், சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமைப் பாட்டைக் காத்து கொள்ளவேண்டும் என்று உருக்கமாய் வேண்டுகோள் விடுக்கிறார். ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவன் என்பதை விளக்கி பிரிவினை பாவம் என்று சொல்லாமல் சொல்லுகிறார். எபே. 4:3-7அவர் வேண்டுகோளும் இன்று நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

### VI. *இறுதியாக சபையை விட்டே விலகினார்கள்:-*

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியில் மனிதரையே கடித்த கதையாக, முதலில் விசுவாசத்தை விட்டுவிலகிய மனிதன், கொஞ்சம் கொஞ்சமாய் சுவிசேஷத்தை, சத்தியத்தை, கொள்கையை, ஐக்கியத்தை விட்டுவிலகி இறுதியாக சபையை விட்டே விலகினான். (அப்.20:28-30.)

எபேசு பட்டணத்து மூப்பர்கள் தங்களையும், தங்களிடம் ஒப்புவிக்கப் பட்டிருந்த மந்தையாகிய சபையையும் கண்காணிக்கும்படி எச்சரிக்கப்படுகின்றனர். இந்த மந்தை கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. இந்த மூப்பர்கள் எபேசு பட்டணத்தில் இருந்த சபையை, மேய்ப்பர்கள் மந்தையைக் காப்பதுபோல் காக்க வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார். ஏனெனில் , மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும் உங்களில் சிலர் எழும்பி சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி, மாறுபாடா னவைகளைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன். (அப்.20:29,30)என்று எச்சரித்திருந்தார். எப்படி ஓநாய்களால் மந்தை சிதறடிக்கப்படுமோ அவ்வாறு கள்ளப் போதகர்களால் சபையும் சிதறடிக்கப்படும். இந்த சண்டாளர்கள், கிறிஸ்து தம் விலை மதியாத இரத்தத்தைச் சிந்திச் சம்பாதித்த சபையை சின்னா பின்னப்படுத்தி கிறிஸ்துவின் சபையைக் கூறுபோட்டு மகிழ்ந்தனர்.

தூர்போன மண்சட்டி நாளுக்கு நாள் மேலும், மேலும் விரிசல் அடைவது போல், அன்று விதைக்கப்பட்ட பிரிவினை வாதம் என்ற நச்சுச் செடி பிரிவினை மார்க்கங்களாக வளர்ந்து பெருகி இன்றைக்கு எண்ணிப் பார்க்கமுடியாத அளவுக்கு உண்மைக் கிறிஸ்தவத்தை ஆக்கிரமித்து மறைத்துக் கொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாத தற்காலத்துக் கிறிஸ்தவர்கள் இந்த பிரிவினை மார்க்கங்களையும் குழுமங்களையும் கிறிஸ்துவின் சபைகள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இது குருடர்கள் யானையைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த கதையைத் தான் நினைவூட்டுகிறது. ஆனால் சபை வரலாற்றைப் படிக்கும்போது கிறிஸ்தவத்தில் இன்று நிலவும் பிரிவினைகளால் உண்மைக் கிறிஸ்தவத்துக்கு ஏற்பட்டிருக்கின்ற தலைக்குனிவை அறிந்து வேதனைப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இந்த சூழ்நிலையில் நாம் செய்யக்கூடியது என்ன?

1. யூதா நிருபம் மூன்றாம் வசனம் கூறுகிற வண்ணம், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நாம் தைரியமாகப் போராட வேண்டும். அந்த ஒரே விசுவாசம் மீட்கப்பட்டு, விலகிப் போனதற்கு முன்பு இருந்த நிலைமைக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.
2. தடம்புரண்டு கிடக்கிற சுவிசேஷம் சீர்ப்படுத்தப்பட வேண்டும்.
3. மாந்த ஞானத்தால் கறைபடாத சத்தியம் போதிக்கப்பட வேண்டும்.
4. கள்ளப் போதகங்களின் ஊற்றுக் கண்கள் அடைக்கப்படவேண்டும்.
5. ஆரோக்கியமான உபதேசங்கள் பறை சாற்றப்பட வேண்டும்.
6. பிரிவினையைத் தகர்த்து ஐக்கியத்தை(**Unity; Not Union**) உருவாக்க வேண்டும்.
7. அப்போஸ்தலர்களால் உபதேசிக்கப்பட்டு ஆதியில் நிறுவப்பட்ட ஒரே சபையை மீட்டு அமைக்கவேண்டும்.

சுருங்கக் கூறின், முதலாம் நூற்றாண்டில் இருந்த தூய புதிய ஏற்பாட்டுச் சபை மலர்ந்து மணம் பரப்ப வேண்டும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், அவருடைய பிதாவும் ஒன்றாயிருப்பதுபோல, நாமனைவரும் ஒன்றாயிருந்து, ஆம், சத்தியத்தினடிப்படையில் ஒன்றாயிருந்து, வேதம் விளம்புவதை மாத்திரம் விவரித்துக் கூறவேண்டும். வேதம் விளம்பாதவைகளுக்கு நாம் ஒருபோதும் உடன்படவே கூடாது. இதையே, தன்னை நேசிக்கும் ஒவ்வொருவரிடமிருந்தும் தேவன் எதிர்பார்க்கிறார்.

**E.Z.செல்வ நாயகம்**

திருமறை ஆசான் இதழின் நிறுவன ஆசிரியர் **E.Z.செல்வநாயகம்** அவர்கள் பரம இளைப் பாறுதலுக்குள் பிரவேசித்து 9.2.2001 -உடன் எட்டு ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

**ஆசிரியர்.**

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!

# உலக வீடியோ வேதாகமக் கல்லூரியின்
## மூன்றாவது பட்டமளிப்பு
## விழா அழைப்பிதழ்



**நேரம்** : காலை 9 :30 மணி
**நாள்** : 23-2-2001 வெள்ளிக்கிழமை
**இடம்** : கிறிஸ்துவின் சபை வளாகம்
தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

*சிறப்புச் செய்தி*

சகோ. சார்லஸ் டீ பால்மா U.S.A.
***Bro. CHARLES DI PALMA*** **U.S.A.**

நற்செய்திக் கூட்டங்கள்

நேரம் : மாலை 6:30 மணி
நாள் : பிப்ரவரி 23,24 - 2001- வெள்ளி,சனி

*பெண்கள் சிறப்பு வகுப்பு*

சகோதரி. மேரி டீ பால்மா U.S.A
***Sis. MARY DI PALMA*** U.S.A

தொடர்பு முகவரி : கிறிஸ்துவின் சபை,த.பெ.எண்.27, காங்கேயம்.
போன்:04257- 20030, e- mail : kangayam cofc @ eth.net

# நம்மை கட்டுப்படுத்தும் கட்டளை எது?

வேதாகமம் இரண்டு பெரிய பாகமாக பிரிக்கப்பட்டுள்ளது. அவைகள் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்பவைகள். ஏற்பாடு என்றால் உடன்படிக்கை அல்லது பிரமாணம் என்று பொருள்.எனவே தேவன் தமது மக்களுக்கென ஒரு பிரமாணத்தை வைத்திருந்தார் என்பதற்கும், அந்த (பழைய) பிரமாணத்தை பின்பு பழமையாக்கி இனியும் தொடர்ந்து அது நம்மை கட்டுப்படுத்தாமல், புதிய பிரமாணத்தை கொடுத்துள்ளார் என்பதற்கும் இது சுய விளக்கமளிக்கிறது. இரண்டு பிரமாணங்களும் ஒரே நேரத்தில் கட்டுப்படுத்தாது என்பதை மனதில் வைக்க வேண்டும்.

வேதத்தை வாசிக்கையில், மோசேயின் பிரமாணமாகிய பழைய பிரமாணம். இனியும் தொடர்ந்து நம்மை கட்டுப்படுத்துவதில்லை என அறியலாம். ஏனெனில் அப்பிரமாணம் கொடுக்கப்படுகையில் நாம் இவ்வுலகில் இருக்ககூட இல்லை. யாத்திராகமத்திற்கு திருப்பினால், இஸ்ரவேல் ஜனங்களுக்காக மாத்திரமே தேவன் அப்பிரமாணத்தை கொடுத்தார் என்பதை நாம் கவனிக்கக்கூடும். (யாத்.20) இப்பொழுது உபாகமத்திலிருந்து வாசிப்போம். '' மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் அழைப்பித்து, அவர்கள் நோக்கி; இஸ்ரவேலரே, நான் இன்று உங்கள் காதுகள் கேட்கச் சொல்லும் கட்டளைகளையும் நியாயங்களையும் கேளுங்கள். நீங்கள் அவைகளின்படி செய்யும்படிக்கு அவைகளைக் கற்றுக் கைக்கொள்ளக் கடவீர்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஓரேபிலே நம்மோடே உடன்படிக்கை பண்ணினார். இந்த உடன்படிக்கையை கர்த்தர் நம்முடைய முற்பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார்''. (உபா.5:1-3) பிறகு தொடர்ந்து பத்துக்கட்டளைகளை விளக்கி கூறுகிறார். ஆகையால் இந்தப் பிரமாணம், இஸ்ரவேலருக்கு அல்லது யூதர்களுக்கு கொடுக்கப்பட்டதேயன்றி புறஜாதிகளுக்கு கொடுக்கப்பட்டதன்று. இப்போது நமது கேள்வி, இந்த பிரமாணம் எவ்வளவு காலம் தொடர்ந்தது? அப்பிரமாணம் இன்றும் கட்டுப்படுத்தகூடுமா? பார்ப்போம்.

கிறிஸ்து தாமே மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்து மரித்தார். அதைப்பற்றி அவர் குறிப்பிடுகையில், '' நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள். அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும், பூமியும் அழிந்து போனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும்

ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.'' (மத்.5:17,18) சிலர் இவ்வசனத்தை குறிப்பிட்டு பேசுகையில், பழைய பிரமாணத்தைக் கர்த்தர் தொடர்ந்து அமல்படுத்துவதாக கூறினார் என்பர். ஆனால் அப்படியல்ல, ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது பிரமாணத்தையோ இருவகையில் கைகொள்ளலாம். ஒரு ஒப்பந்தத்தை முழுமையாக அழிந்தோ அல்லது கனப்படுத்தியோ அல்லது அமல்படுத்தியோ கைக்கொள்ளலாம். கிறிஸ்து மேற்படி வசனத்தில் குறிப்பிடுவது, தாம் அந்த பிரமாணத்தை அழிப்பதற்காக அல்ல, நிறைவேற்றவே வந்ததாக கூறுகிறார். மேலும் எல்லாம் நிறைவேற்றித் தீருமளவும் அதன் ஒரு பாகமாகிலும் அழிக்கப்பட மாட்டாது. ''நிறைவேறித் தீருமளவும்'' என்ற இச்சிறுபதம். ஒரு காலகட்டத்தைக் குறிக்கிறது. என்ன ஆகுமளவும் நியாயப்பிரமாணம் நிலைத்திருக்கும்? அதில் உள்ளவைகளெல்லாம் நிறைவேறுமளவும் இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோ அல்லது எல்லாம் அழிவுண்டு போகும் காலத்தையே குறிப்பதில்லை. ஏனெனில் அதற்குப் பிறகு (ஆண்டுகள் பல கடந்த) தான் எல்லாம் அழிக்கப்படும். எப்படியிருப்பினும் அவர் நியாயப்பிரமாணமானது வெகு சீக்கிரத்தில் நிறைவேறும் என்பதையே குறிப்பிட்டு பேசுகிறார். இது எப்பொழுது நடக்கும்?

கர்த்தர் தமது மரணத்திற்கு சிறிது நேரத்திற்கு முன் குறிப்பிட்டார், '' எல்லாம் முடிந்தது'' (யோவான் 19:30). அவர் மரித்த பொழுது தேவாலயத்துத் தீரைச்சிலை மேலிருந்து கீழாக கிழிந்தது.(மத்.27:51). இப்படியாக நியாயப்பிரமாணம் முற்றுப்பெற்றுவிட்டது என்பதை கிழிந்த திரைச்சீலை அடையாளப்படுத்தியது. பவுல் இதைக்குறித்து, '' நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்தார்''. (கொலே.2:14) எனவே கிறிஸ்து பிரமாணத்தை சிலுவையிலே ஆணியடித்தார்.

யோவான் எழுதும்போது,'' எப்படியெனில், நியாயப்பிரமாணம் மோசேயின் மூலம் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின''. (யோவான் 1:17) இரண்டு பிரமாணங் களுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் காணுங்கள். தேவன் தாமே, மோசே, எலியா, கிறிஸ்து ஆகியோருக்கு முன்பாக, ''இவர் என்னுடைய நேசக்குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்'' என்றார் (மத்.17:5). தேவன் பூர்வ காலங்களில் வித்தியாசப்பட்ட வழிகளில், வித்தியாசப்பட்ட நபர்கள் மூலம் பேசினார். ஆனால் இந்தக் கடைசி நாட்களாகிய இப்பொழுது தமது குமாரன் மூலம் பேசுகிறார். (எபிரேயர் 1:1,2) எபிரேய எழத்தாளர் இதை தெளிவாக்கி,'' ஏனெனில் எங்கே மரண சாதனமுண்டோ அங்கே அந்தச் சாதனத்தை எழுதியவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரண சாதனம் உறுதிப்படும். அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்கு பெலனில்லையே''. என்றும் (எபிரேயர் 9:16,17)

''தேவனே, இதோ உமது சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன் என்று சொன்னார். இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படியே, நாம் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம்''. (எபி.10:9,10) முதலாவது எது? பழைய ஏற்பாட்டுப் பிரமாணம், இரண்டாவது எது? புதிய ஏற்பாடு, ஆகையால், புதிய பிரமாணத்தை அமலாக்க பழைய பிரமாணத்தை எடுத்துப் போட்டார். பழைய பிரமாணம் இனியும் நம்மைக் கட்டுப்படுத்து வதில்லை என்பதை: 2.கொரிந்தியர் 3-ம் அதிகாரத்தை ஒருவர் வாசித்தும், எப்படி உணர்த்தப்படாமல் இருக்கக்கூடும். பவுல் நியாயப்பிரமாணம் மரணத்திற் கேதுவான ஊழியமெனவும், புதிய பிரமாணம் (கிறிஸ்துவின் பிரமாணம்) ஜீவனுக்கேதுவாக பிரமாணம் என்றும் கூறுகிறார். காலத்தியர் புத்தகத்தில் பவுல் கிறிஸ்துவை விட்டு, நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வது எவ்வளவு மதியீனமானது என்பதைக் காட்டுகிறார். அவர் இதைக் குறிப்பிடுகையில், '' நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டு பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்'' (கலா.5:4) என்கிறார். (கலா4:21-31) யும் வாசிக்கவும்.

ஆகையால் நாம் இனியும் மோசேயின் பிரமாணத்திற்கு கீழானவர்களல்ல, மாறாக கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு நாம் கீழானவர்கள். இதினால் தான் சிலுவையில் தொங்கிய கள்ளனை நமது மனமாற்றத்திற்கு உதாரணமாக இயலாது. அதுபோலவே, தசம பாகம், இசைக்கருவி பாடலில் பயன்படுத்துதல், ஓய்வுநாளை அனுசரித்தல் போன்ற அநேக காரியங்களை கைக்கொண்டு பழைய பிரமாணத்திற்கு திரும்ப முடியாது. பழைய ஏற்பாட்டு பிரமாணம் இன்று அமலில் இல்லை என்பதாலயே கொலை, விபச்சாரம் போன்ற பாவங்கள் செய்ய அனுமதிக்கப்படவில்லை. அதுபோலவே புதிய ஏற்பாடும் இப்படிப்பட்ட பாவங்களை சரீரப்பிரகாரமான மனரீதியான பாவங்களை கடிந்து கொள்கிறது.

பழைய ஏற்பாடும் தேவனுடைய வசனம் தான். இருந்தும் அது நம்மை இப்போது கட்டுப்படுத்துவதில்லை. மாறாக, நாம் கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு கீழானவர்களானபடியால், நமது விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிற வருமாகிய கிறிஸ்துவையே நாம் நோக்கிப் பார்க்க வேண்டும். நாம் இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக கிறிஸ்து நமக்காக மரித்திருக்க, யாரானாலும் என் பழைய ஏற்பாட்டு பிரமாணத்திற்குச் செல்ல விரும்புகின்றனர்? உங்கள் வேதத்தை வாசிக்கும் பொழுது பகுத்துப் படிக்க வேண்டும் என்று பவுல் கூறிய அறிவுரையை மனதில் கொள்ளுங்கள். (2.தீமோ.2:15) நீங்கள் அப்படிச் செய்யும்போது, இன்று நம்மை கட்டுப்படுத்தும் பிரமாணம் எது என்று பிரமாணங்களின் வித்தியாசத்தைக் காண உங்களால் கூடும்.

**J.C.Choate** J.C. சோட்

பெண்கள் பகுதி

# ஏற்ற துணை என்பதன் பொருள் என்ன?

எல்லா மிருக வகைகளும் சிருஷ்டிக்கப்பட்டபின்பு ஆதாம் ஒவ்வொரு சிருஷ்டிப்புக்கும் பெயர் வைத்தான். ஆனால் ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் உண்டாக்கப்படவில்லை.(ஆதி.2:20) தேவன் தம்முடைய சாயலிலே மனிதனை உண்டாக்கி அவனுக்கு அறிவு, உணர்வு, அழியாத ஆவி, இவற்றைக் கொடுத்தார். ஏனென்றால் இவனுக்கும் தேவனுக்கும் எப்போதும் அன்பும், ஐக்கியம் இருக்கவேண்டுமென்று அப்படி இப்போது மனிதனாகிய ஆதாம் தேவனால் உண்டாக்கப்பட்ட இந்த அதிசய உலகத்தில் உள்ளவைகளைப் பற்றி தன் கருத்தை பரிமாறிக்கொள்ள தன்னைப்போல் ஒரு சிருஷ்டி இல்லையே என்று உணர்ந்தான்.

சரியாகப் பார்த்தால், திட்டமிட்ட மனிதப் படைப்பில், ஆதாம் வெறும் பாதியாக இருந்தான். அவன் தானாகவே வாழ்ந்து செயல்பட்டுக்கொண்டு தன்னை ஒரு பூரணமானவனாக எண்ணிக்கொண்டிருந்தாலும், தேவன் அவன் ஒரு முழுமையானவனாக இருக்கவேண்டுமானால், பால் சம்பந்தமாகவும், சரீரப்பிரகார மாகவும், மனத்தளவிலும், உணர்ச்சிப் பூர்வமாகவும், சமுதாயத்திலும், ஆவிக்குரிய ரீதியிலும் ஆதாமுக்கு கட்டாயம் அவனைப்போல ஒரு உயிர் தேவையென்று அறிந்திருந்தார். ஆகவே, ஆதாம் தன் தனிமையை உணர்ந்தபோது, தேவன் அவனுக்கு அயர்ந்த நித்திரையை வரவழைத்து அவனுடைய பக்கவாட்டில் இருந்து, ஒரு விலா எழும்பை எடுத்தார். விலாவிலிருந்து - மண்ணிலிருந்து அல்ல - தேவன் பெண்ணை உண்டு பண்ணி மனிதனிடத்திற்கு கொண்டுவந்தார். ஆதாம் கூறுகிறான் ''அப்பொழுது ஆதாம்; இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்ட படியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்'' (ஆதி.2:23)

இன்றைய உலகத்திலே திருமணமே ஆகாத ஆண்களையும் தனியாகவே வாழ விரும்பும் பெண்களையும் நாம் பார்க்கிறோம். சிலர், தேவனுக்கென்று சேவை செய்வதற்கு தங்களை ஒப்புக்கொடுத்து விடுகிறார்கள். மனித உறவுகளால் உண்டாகும் அன்பு தேவன் மீது வைக்கும் அன்பால் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

மற்றும் சிலர், பலவிதமான சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் திருமணத்தை தள்ளிவிடுகிறார்கள். ஆனால் பெரும்பாலான ஆண்களும், பெண் களும் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள திருமணம் செய்து குடும்பம் நடத்த ஆசைப்படுகிறார்கள். மனிதனுக்கு, அவன் மனைவியின் அன்பும் ஆதரவும் தேவைப்படுகிறது. அவள்தான் குடும்பத்தை உருவாக்குவதில் உதவியாய் இருப்பவள். பெண் அரவணைப்புக்காகவும், பாதுகாப்பிற்காகவும் தன் கணவனின் உதவியை நாடுகிறாள். இருவருமே தங்களுக்குப்பிறகு தங்கள் பிள்ளைகள் வாழ

வேண்டும் என்ற நோக்கத்தோடு புதிய உயிரை உண்டாக்குவதில் விருப்ப முள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்த ஆழமான தேவைகள் எல்லாம் தேவனால் மனித இனத்திற்கு விதைக்கப்பட்டது. நாம் இதை மறுக்க முடியாது.

மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான ஒற்றுமையை ஒப்பிட்டுப் பார்த்தால் எந்தவொரு பெண்ணும் எந்த ஒரு ஆணுக்கும் ஏற்றதாகவே இருக்கிறாள். ஆனால்,மனித இனத்தில் குறிப்பிட்ட ஆண்களும் பெண்களும் ஒருவருக் கொருவர், பொருத்தமற்றவர்களாக இருக்கிறார்களென்பதை நாம் அறிவோம். அவர்கள் ''உயரத்தில்'' ஒரே மாதிரி இருப்பதில்லை. சில நேரங்களில் மெத்த படித்த ஒரு ஆண், படிப்பறிவில்லாத ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்கிறான். அவனைத் தவிர அவளுக்கு இந்த உலகத்தில் வேறொன்றும் தெரியாது. சில நேரங்களில் சமார்த்தியமான, அறிவுமிகுந்த பெண்கள் குறுகிய புத்தியுடைய ஆண்களை திருமணம் செய்து தங்கள் வாழ்வில் பெரிய தவறை செய்துவிடுகி றார்கள். வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுப்பதென்பது, எவ்வளவு ஆராய்ந்து செயல்படவேண்டிய ஒன்றாக உள்ளது. இருவருடைய குணநலன்களும், எல்லா வகையிலும் ஒத்துப் போகக் கூடியதாக இருக்கவேண்டும். தேவன் திட்டமிட்டபடி ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் ஏற்றவர்களாக அமையும்போது எவ்வளவு சந்தோஷமும், எவ்வளவு பிரயோஜனமுள்ளதாகவும் இருக்கிறது.

எவ்வாறு பெண் ஒரு துணையாக இருக்க முடியும்? ஆரம்பத்திலேயே பார்த்தபடி அவள்தான், கணவனுக்கு வாழ்நாள் முழுவதும் துணையாக இருக்கிறவள். ஆதியிலிருந்தே விவாகரத்து என்ற ஒன்று ஏற்பட தேவன் விரும்பவேயில்லை. ''வாழ்க்கையில் ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண்'' என்று தேவன் திட்டமிட்டிருந்தார். இயேசுக்கிறிஸ்து இதை மீண்டும் வலியுறுத்தும் வண்ணமாகவே, '' அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக; ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும் நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால் அவர்களை இருவராயிராமல், ஒரே மாம்சமா யிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன் என்றார்'' (மத்.19: 4-6)

வாழ்க்கைத் துணைவர்களாக இருந்துகொண்டு, அறிவிலும், ஒருவருக்கொருவர் புரிந்து கொள்வதிலும் வளர்கிறார்கள். மனித இனம் மகிழ்ச்சி யாயிருப்பதின் முக்கிய பங்கே ஆணும், பெண்ணும் தனிமையாக இல்லாமல் ஒன்றாக இருப்பதேயாகும். இருவரும் ஒருவருக்கொருவர் பொருத்தமுடைய வர்களாக இருந்தால், இருவரும் பலமுள்ளவர்களாகவும் முடிவெடுக்க வேண்டிய விஷயங்களிலும், வாலிபத்திற்கே உரிய சவால்களிலும்ஒருவருக்கொருவர்

ஆதரவுள்ளவர்களாக இருக்கமுடியும். அவர்கள் முதியோர்களாகும்போதும் அவர்களுடைய பலவீனத்திலும், வியாதியிலும், ஒருவருக்கொருவர் கவனம் செலுத்துகிறவர்களாகவும் இருப்பார்கள்.

''அவனுக்கு ஏற்ற துணை'' என்பதின் பொருள் என்னவெனில், ஆண்களால் ஏற்படும் இடைவெளியை இவள்தான் நிரப்பவேண்டும். ஒருவேளை அவன் அதை நிரப்பமுடியாத இயலாமையில் இருக்கலாம், அல்லது அவன் மற்ற காரியங்களை சந்திக்கவேண்டியிருக்கும், வாழ்க்கையின் மற்ற பொறுப்புகள் அவனுக்கு நிறைய இருக்கலாம். எந்தவொரு விவசாயும் தன் மனைவி, குழந்தைகளின் உதவியின்றி நட்டவும், பயிர்களைஅறுவடை செய்யவும் இயலுமா எத்தனை சிறிய அளவு வியாபாரி தங்கள் கணக்கு வழக்குகளை பார்க்கவும், புதிய பொருட்கள் வாங்ககோரிக்கை அனுப்பவும் , கடைகளை மேற்பார்வையிடவும் மனைவிகளின் உதவியை சார்ந்திருக்கிறார்கள் தெரியுமா? புதிய ஏற்பாட்டில் கூடாரத் தொழில் செய்யும் ஆக்கில்லாவுக்கு அவன் மனைவி பிரிஸ்கில்லா உதவியாயிருந்தாள். ''யூதரெல்லாரும் ரோமபுரியை விட்டுப் போகும்படி கிலவுதிராயன் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்து தேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு, அவர்களிடத்திற்குப் போனான். அவர்கள் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள்; தானும் அந்தத் தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி, வேலைசெய்து கொண்டுவந்தான்''. (அப்.18:2,3)

வேதாகமத்தின்படி பார்த்தால், பெண்களின் அடிப்படை வேலையென்னவென்றால் இந்த உலகிற்கு குழந்தைகளை பெற்றுக்கொடுப்பதும், அவர்களையும்,அவள் கணவனையும் கவனமாய்ப் பார்ப்பதும், தன் வீட்டை கவனிக்கவும்தான். அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு எழுதும் போது ''தேவ வசனம் தூஷிக்கப் படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும் வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்கு கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும், முதிர்வயதுள்ள ஸ்தீரிகளுக்குப் புத்தி சொல்லு'' என்கிறார்.(தீத்து.2:4,5) இளம் விதவைகளுக்கு அறிவுரையாக தீமோத்தேயுவுக்கு கூறும்போது '' திருமணமாகாத இளம் பெண்களுக்கும் இது சரியாகப் பொருந்தும்'' ஆகையால் இளவயதுள்ள விதவைகள் விவாகம்பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும், விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்'' (1.தீமோ.5:1-4).

கணவன் தன் குடும்பம் வாழ்வதற்கென்று சம்பாதிக்கும்போது பெண்ணானவள் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து, வீட்டையும், சமாளித்து, தன் வேலையை சரியாகச் செய்தாள், அதுவே ஒரு பெண்ணுக்கு ஏற்றதாக இருக்கும். பெண்களுக்கென்று கொடுக்கப்பட்டிருக்கும் இந்தப் பொறுப்பின் முக்கியத் துவத்தை சிலர் உணரமால், இதை இழிவான தொழிலென்றும், சங்கடமான ஒன்று என்றும் கருதுகின்றனர். அடுத்த தலைமுறையின் ஆத்துமாக்களை நித்தியத்திற்கு வழிநடத்தும் சிலாக்கியத்தையும் அவர்கள் வாழ்க்கையை சீர்படுத்தும் வேலையையும் விட வேறு எந்த உயரிய பணிகளையும் தேவன் பெண்களுக்கு பரிசாக கொடுத்திருக்க முடியாது. குற்றங்கள் மலிந்துவரும் அதேநேரத்தில் ஒழுக்க ரீதியான பிரச்சனைகள் தீவிரமாக வளர்ந்து வருவதை இன்றைய உலகிலே நாம் பார்க்கிறோம். இதைப் பார்க்கும்போது தாய்மார்கள் தங்கள் வீட்டில் இருந்து செய்யவேண்டிய வேலை நிறைய உள்ளது என்பது நமக்கு விளங்குகின்றது. இல்லாவிட்டால் குடும்பம் அழிவுக்கு செல்லும் நிலை வந்துவிடும். ஏன் இந்தப் பிரச்சனை என்றால் ஆண்களுக்கு சரியாக பெண்களும் வீட்டை விட்டு வெளியே வேலைக்கு செல்லுவதால்தான். இதற்கு எந்த காரணம் வேண்டுமென்றாலும் கூறலாம். பெண்கள் இப்படி வேலைசெய்வதின் அவசியம் எதுவாகவும் இருக்கலாம். பலமடங்கு வீடுகள் அழிவுப்பாதையில் செல்லுகிறதென்றால் தேவன் மனைவிகளுக்கென்றும், தாய்மார்களுக்கென்றும் கொடுத்திருக்கிற கட்டளைக்கு கவனம் செலுத்தமால் போவதேயாகும்.

குழந்தைகளையும், வீட்டையும், பாதுகாக்கவும் வேலையோடு கூட,'' ஏற்ற துணை'' என்பவள் தன் கணவனின் அருகில் ஒரு சொத்தாக நிற்க தன்னையே தயார் செய்து கொள்ளவேண்டும். அவள் தோற்றத்திற்கு அவன் அனுமதியளிக்கும் வகையில் அவள் நல்ல உடைகளை உடுத்திக்கொள்ளவேண்டும். தன் கணவனின் எண்ணங்களை பரிமாறிக்கொள்ளவும் அவனுடைய தேவைகளை அறிந்து, தங்கள் சொந்த பிரச்சனைகளையும், மற்ற வெளிப்பிரச்சனைகளையும் உணர்ந்து செயல் படும்படியாக தன் மனதை அவள் வளர்த்துக்கொள்ளவேண்டும். உணர்வுப் பூர்வமான அவனுடைய தேவைகளை சந்திப்பதில்முனைப்புக்காட்டுகிறவளா கவும், அவனை சந்தோஷபடுத்துவதும், அவனுடைய வாழ்க்கையில் நன்மையான காரியங்கள் செய்வதுமே தன் இலக்காக அவள் கொள்ளவேண்டும். இப்படி ஒரு வெற்றியுள்ள மனைவி தன் கணவனுக்கு உற்ற நட்புக்குரியவளாகவும் நெருங்கிய நம்பகமுள்ளவளாகவும் இருக்கிறாள்.

(தொடரும்......)



**B. B. சோட்**

**R. R. நாயகம்.**

# II. சாமுவேல் ஒரு கண்ணோட்டம்

**1. காலம்** : சுமார் 975 கி.மு.

**2. ஆசிரியர்** : சாமுவேல் என்று பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப் படுகிறது.

**3. இந்நூல் பற்றி** :

அ) இந்நூல் சவுலின் மரணத்திலிருந்து (கி.மு.1010) தாவீதின் மரணம் வரை (கி.மு. 970) உள்ள காலத்தின் சம்பவங்களை விவரிக்கிறது.

ஆ) தாவீதின் யுத்தம் பற்றி இடைவெளி இல்லாத தகவல்களை இந்நூல் நமக்குத் தருகிறது.

இ) இந்நூல் வேதாகமம் எங்கும் பல ஆசிரியர்களால் மேற்கோளிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

ஈ) 1. சாமுவேல், சவுலின் வீழ்ச்சியைக் குறித்துச் சொல்லுவதுபோல், இந்நூல் தாவீதின் வெற்றியைக் குறித்துக் கூறுகிறது.

உ) இந்நூல் தாவீதின் பாவங்களையும், தனிப்பட்ட பெலவீனங்களையும் மூடி மறைக்காமல் அவைகளை வெளிப்படுத்துகிறது.

ஊ) சவுலைக் காட்டிலும் தாவீது பாவத்தைப்பற்றிய அணுகுமுறையில் வித்தியாசப்பட்டிருந்தான். தாவீது தாழ்மையுள்ள மற்றும் மனந் திரும்புகிற இருதயம் உடையவனாயிருந்தான்.

4. **இந்நூலின் செய்தி:**

இந்நூல் முக்கிய செய்தி, தேவன் தாவீதின் வீட்டை ஸ்தாபிப்பது பற்றியதாகும். (2.சாமுவேல் 7: 4-6)

வாலிபர் பகுதி

# கற்கள் பேசட்டும்...

சர்வ சிருஷ்டிக்கும் எஜமானரும், சதா காலமும் உள்ள சொரூபியுமான சேனைகளின் தேவனுடைய கரத்திலிருந்து இந்த ஆண்டின் முதல் திங்களை பெற்றுக்கொண்ட நாம், அவருடைய ஜனமாகிய இஸ்ரவேலரை எகிப்தின் சக்கரவர்த்தியான பார்வோனின் பயங்கரமான கைகளிலிருந்து விடுதலை செய்தபின் யோர்தான் நதிக்கரையில் யோசுவாவைக்கொண்டு கொடுக்கப்பட்ட யோசனைகளை கடந்த மாதத்தில் கவனித்துப் பார்த்தோம்.

செழிப்பான தோட்டம் போன்ற வேதாகமத்தில், ஞானத்தோட்டமாம் நீதிமொழிகளில் , " ... தன் நடையைக் கவனித்திருக்கிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான்" (16:17) என்ற மலர் மணங்கமழுவதை நாம் நுகரலாம். தேவனுடைய நல்லாலோசனைகளைக் காத்துக்கொண்டு, அதை கடை பிடித்தோமானால், நாம் நம்முடைய ஆத்துமாவை ஆவிக்குரிய அழிவிலிருந்து தப்புவித்துக்கொள்வோம் என சர்வ ஞானியாகிய தேவனிடத்திலிருந்து ஞானத்தைப் பெற்றுக்கொண்ட சாலொமோன் கூறுகிறார்.

## அன்பு எனும் கல்

நமது தமிழ்மொழியின் முதல் எழுத்தை தன் முதல் எழுத்தாய் கொண்ட "அன்பு" நமது கட்டுரையிலும் முதல் கல்லாக இடம்பெறுகிறது. அகிலத்தில், ஆவி,ஆத்துமா, சரீரம் என்ற மூன்றையும், அண்டசராசரங்களையும் தன் அநந்த அறிவைக்கொண்டு படைத்த பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவரிடமிருந்து பெற்றுக்கொண்ட மனிதனிடத்தில், அவசரமும் அவதியும் நிறைந்த இந்த நவீன உலகில் கிடைக்கப் பெறாத அரிதான ஒன்றாக "அன்பு" என்கிற மூன்றெழுத்து இருக்கிறது.

சிங்காரமான தோட்டம், பூத்துக்குலுங்கும் புஷ்பங்கள், சீராய்ப் பாய்ந்து வரும் நான்கு நதிகள், காலத்தைக் கணக்கிட கெம்பீரமாய் புறப்பட்டு வரும் சூரியன், இரவின் இருளால் இடறாமல் இருக்க சந்திரன். தனியாக இருந்தால் நலிந்து போவான் என்பதற்காக ஏற்றத்துணை என்று ஆதி மனிதனாகிய ஆதாமிடத்தில் தன் அன்பை தேவன் அளப்பில்லா வண்ணம் பொழிந்திருந்த போதிலும், கண்கவர் காட்சியையும் , மண்ணுக்குச் செல்லும் மாம்ச ஆசையையும், நிலையில்லாத வாழ்க்கையின் பெருமையையும் பெரிதன கருதியதால் அன்று மனிதன் வாடிவதங்கி கருகி,பின் கல்லறை செல்லவேண்டியிருந்தது.

கருத்து அறையில் உருக்கொண்டு, மண்வடிவம் பெற்ற மனிதன் கர்த்தரின் கட்டளையை மீறினதால் கல்லறைக்குத் திரும்பினான் என்று கண்டவுடன் வெதும்பிப்போனார் தேவன். தன் கரத்தின் கிரியையாகிய மானுடத்தை தன்னகத்தே திரும்பவும் திருப்பிக்கொள்ள கிருபையையும், அன்பையும் அவன் மீது பொழிந்தார். அப்படி கிருபை வைத்தவர் தன் குமாரனையே இப்புவிக்கு அனுப்பிய கிரியையால் அந்த உன்னத ''அன்பை'' வெளிப்படுத்தினார் என்று யோவான் கூறுவதை வாலிபர்களாகிய நீங்கள் கவனியுங்கள். '' தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது'' (1.யோவான் 4:9)

தேவன் இப்படித் தன் அன்பை வெளிப்படுத்தினார் என்று தூய ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதிய யோவான், அதன் காரணத்தையும் தன் சுவிசேஷ நூலில் யாத்துக் கொடுத்திருப்பதைப் பாருங்கள். ''தேவன்,தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் **கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு,** அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்'' (யோவான் 3:16) எதையும் எளிதில் பற்றிக்கொள்ளும் தீப்பொறிபோல, எதையும் எளிதாய் புரிந்து கொள்ளும் மனதுடைய வாலிபர்களாகிய நீங்கள் இவ்வசனத்தைப்படித்தவுடன், இவ்வன்பிற்கு, காரணங்களாக, ''நாம் கெட்டுப்போகக்கூடாது'' நித்திய ஜீவன்னை நாம் பெற வேண்டும் என்ற இரண்டுண்டு என்பதை அறிந்திருப்பீர்கள்.

நாம் நித்திய ஜீவனைப் பெற வேண்டும் என்பதற்காக விண்ணுலகம் விடுத்து இம்மண்ணுலகம் வந்த இறைமைந்தன் இயேசு தனது 3 1/2 வருட ஊழியத்தின் இறுதியில் மனித குலத்திற்கு விமோசனம் ஏற்படுத்த தேகமெல்லாம் வருத்தி நோகி சோகமடைந்தவராக, இரத்தத்தின் வேர்வையாலே மெத்தவும் நிறைந்து, இம்மானுவேலாம் அவருள்ளம் உருகி தாங்க முடியாத வேதனையால் மும்முறை ஜெபித்தாரே, பாதகர் நமக்கு தேவனிடம் சேரும் சாதகமான சூழ்நிலை உருவாக்க கால் கரங்களில் ஆணிகள் பாய்ந்தே பாதகன் போல் கள்ளர்கள் மத்தியில் தொங்கினாரே. இப்படி சிலுவையில் சிந்திய குருதியாய் ''அன்பு'' எனும் நதி புறப்பட்டு ஓடுவதை கண்டதால்தானோ பவுல் எபேசு பட்டணத்து சபைக்கு எழுதுகையில் அந்த அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணரவும் அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும் இருந்திடல் வேண்டும் என்ற தன் விருப்பத்தை தெரிவித்தார். (எபே.3:18,19)

வாலிபர்களாகிய நாம் தேவனும், அவரின் குமாரனும் நம்மிடம் இவ்வளவாய் அன்பு கூர்ந்தார்கள் என்பதை உணர்ந்து அவர் மீது நாம் அன்பு வைத்திடல் வேண்டும். ஆதியில் ஆதாமிடம் அவர் எதிர்பார்த்த அதே காரியத்தைத் தான் நம்மிடமும் எதிர்பார்க்கிறார். ''நீங்கள் என்னிடத்தில்

அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்'' என்கிறார் (யோவான் 14:15) நாமும் ஆதி மனிதனைப் போல இருந்து தன் சுதந்திரத்தை இழந்து போகாமல், தேவன் தந்த இந்த இரண்டாவது வாய்ப்பை பயன்படுத்துவோம்.

வாலிபர்களே நமது ஆத்மநேசர் இயேசுக்கிறிஸ்து நமக்கு அன்பிலேயே பிரதான அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆண்டவர் இந்த ஜகத்தில் ஜீவிக்கையில், ''ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை'' (யோவான்.15:13) என்று திருவுளம் பற்றினார். இவ்விதமாய் நம்மிடம் அதிகமான அன்பு செலுத்திய அவர் நம்மிடம் சில காரியங்களை செய்யவேண்டுமென எதிர்பார்க்கிறது நியாயமானது தானே, தன் சீடர்களிடத்தில் அவர் பரத்திற்குரிய உண்மைகளை எடுத்துரைக்கையில்,''நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்: நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்... '' (யோவான் 13:34) நாம் மற்றவர்களின் மேல் மாயமற்ற அன்பை செலுத்த வேண்டியவர்களாகவும், அவர்களுடைய ஆத்துமாவை சிநேகித்து அவர்களுக்காக ஜீவனை தியாகம் செய்யவும் தயாராக இருந்திடல் வேண்டும். (1.யோவான்.3:16).

பவுலானவர் அன்பைக்குறித்து கொரிந்து சபைக்கு வரைந்த மடலில் ஒரு அத்தியாயம் முழுவதும் விளக்கிக் கூறுகையில், ''இப்பொழுது, விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது'' (1.கொரி.13:13) என்கிறார். அவர் இப்படி எழுத ஓர் காரணமுண்டு, இவ்வுலக வாழ்வையும் தாண்டி, நமது பரம்பொருளாம் பரம தேவனோடு பரலோகத்தில் ஜீவிக்கையில், நமது விசுவாசமும், நம்பிக்கையும் நிறைவேறி முடிந்துவிட்ட போதிலும் அன்பே பிரதானமாக நிலைத்திருக்கும். நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் தேவன் மீதான விசுவாசமும், நம்பிக்கையும் மிகவும் அடிப்படைதான் என்பது உண்மையானாலும் கலாத்தியர்.5:6-ல் ''...அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்'' என பவுலைக்கொண்டு ஆவியானவர் நமக்கு தெளிவாய் எழுதிக்கொடுத்திருப்பதை வாலிபர்களாகிய நாம் அறிந்திடல் வேண்டும்.

எனக்கன்பான வாலிப உள்ளங்களே, தேவன் மீதும், சக மனிதர்கள் மீதும் அன்பு செலுத்துவதில் நியாயப்பிரமாணமே நிறைவேறுகிறது என்று அறிந்து நாம் விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை நிலை நிறுத்துகிறவர்களாயிருப்போம். (மத்.22:40; ரோமர். 3:31) அறிவுக்கெட்டாத அந்தஅன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் வாலிபர் களாகிய நீங்கள் நிறையப்படவும், தேவன் அநுக்கிரகம் பண்ணுவாராக!.ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்.**

# வேதாகமக் கேள்வி - பதில்

***கேள்வி : சத்தியம் என்பது என்ன?***

பதில் : இயேசு தாமே இக்கேள்விக்குப்பதிலளித்துள்ளார். ''உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். இதன் பொருள், ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய அனைத்து சத்தியங்களும் வேதாகமத்தில் மட்டுமே கண்டுபிடிக்க முடியும்'' என்பது (2.பேதுரு. 1:3) ஆகவே, எந்த ஒருமனிதனிடத்திலிருந்தோ அல்லது எந்த ஒரு அமைப்பிடமிருந்தோ மேற்கொண்டு எந்த உபதேசமும் அல்லது சத்தியமும் தேவையில்லை. வேதாகம சத்தியத்தின்படியாகவே, எல்லோரும் ஒரு நாளில் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

***கேள்வி : படிப்பறிவில்லாத அப்போஸ்தலர்கள் சுவிசேஷப் பணியை எப்படிச் செய்தார்கள்?***

பதில் : பரிசுத்த ஆவியினாலே, அப்போஸ்தலர்கள் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப்பட்டார்கள். (யோவான்.16:13) பரிசுத்த ஆவியானவர், எல்லாவற்றையும் அவர்களுக்குப் போதித்து, கிறிஸ்து சொன்ன எல்லாவற்றையும் நினைவுப்படுத்தினார். (யோவான் 14:26) இருப்பினும், படிப்பில்லாதவர்களை படிப்பறிவுள்ளவர்களாக மாற்ற ஆவியானவர் வரவில்லை. இந்தநாட்களில் அவர் அப்படிச் செய்வதில்லை. தேவனுடைய வேலையைச் செய்வதற்கு ஒருவன் மெத்த படித்தவனாக இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. கர்த்தருடைய ஊழியத்தில் படிப்பு குறைவானவர்கள், பெரிய காரியங்களை அடிக்கடி செய்துள்ளார்கள். ஒருவனுக்கு என்ன தாலந்து கொடுக்கப்பட்டுள்ளதோ அதை தேவரீருடைய நாமம் மகிமைப்பட பயன்படுத்தவேண்டும்.(மத்.24:14-30).

***கேள்வி: எபிரேய நிருபத்தை எழுதின ஆசிரியர் யார்?***

பதில்: ஆதித் திருச்சபை முன்னோடிகளும், முதலாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பெரும்பாலான சபைகளும், பவுலாலே எழுதப்பட்ட நிருபமாக இதை ஏற்றுக்கொண்டார்கள். இந்நிருபத்தில் எழுதப்பட்டுள்ள வசனப்பகுதிகள், பவுலுக்கு ஆதாரவாக உள்ளது.(உ.ம்) எபி.10:34;13:23 இன்னும்,இதன் அமைப்பும் நடையும் பவுலின் பிற நிருபங்கள் போலவே உள்ளது. குறிப்பாக, ரோமர், காலத்தியர் போன்றவை. ஆகவே, இதைப் பவுலடியார்தான் எழுதியிருக்கவேண்டும்.

*கேள்வி : பவுலுடைய சரீரத்தில் இருந்த முள் என்ன?*

பதில் : முதலாவது, நமக்குத் திட்டமாகத் தெரியாது. அவனுக்கு கிடைத்த தரிசனத்தின்போது, அவன் ஒரு வகையில் பாதிக்கப்பட்டிருப்பதைப் போல தோன்றுகிறது. இந்த வசனங்கள் அப்படியிருக்கலாமென்று தான் நமக்குச் சொல்லுகிறது. அப்.9:1-18; கலா.4:13-15 ; 6:11.

*கேள்வி : புறஜாதிகளிடமிருந்து போகவேண்டாமென்று, ஏன் இயேசுவானவர், முதலில் தன்னுடைய சீஷர்களிடம் சொன்னார்?*

பதில்: மத்தேயு 10-ம் அதிகாரத்தில் இது இடம்பெற்றுள்ளது. '' காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரரிடத்திற்குப் போங்கள்'' என்று இயேசு சீடர்களிடம் சொன்னார்.(வ.6) வேறொரு இடத்தில் இயேசு, '' காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரித்திற்கு அனுப்பப்பட்டனேயன்றி மற்றபடியல்ல'' என்றார். (மத்.15:24) அவரின் தனிப்பட்ட ஊழியம் யூதர்களுக்காக மாத்திரம் இருந்தாலும், தேவனைப்போல,புறஜாதிகள் யூதர்களோடு உடன் சுதந்திரராய் இருக்க வேண்டுமென்று அநாதி கால முதல் சித்தம் கொண்டிருந்தார். (எசே.3:1-11) விழுந்துபோன தாவீதின் கூடாரம் திரும்பி எடுப்பிக்கப்படபிறகு, புறஜாதிகள் அவருடைய நாமத்தில் பேரில் அழைக்கப்படுவார்கள் என்று தீர்க்கதரிசனத்தில் உரைக்கப்பட்டுள்ளது. (ஆமோஸ். 9: 11-14) இதன் நிறைவேறுதலை நாம் அப்.15:15-17ல் வாசிக்கிறோம்.

யூதர்களுக்கு, முதலில் சுவிசேஷம் ஏன் அறிவிக்கப்படவேண்டுமென்பதற்கான கார்ணம் நமக்குச் சொல்லப்படாவிட்டாலும், இஸ்ரவேலர் ஆரம்பமுதல் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமாயிருந்து, அவர்கள் மூலம் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியா வரவேண்டியிருந்தால், இப்படிச் சொன்னது சரியானதாவே தெரிகிறது.

**''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்...''** எபி.11:6

**'' ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்''.** ரோமர் 10:17

# வெளிப்படுத்தின விசேஷம்

***அதிகாரம்: பதினொன்று***

வெளிப்படுத்துதல் பதினோராம் அதிகாரம், கைக்கோலுக்கு ஒப்பான ஒரு அளவுகோல் யோவானிடத்தில் கொடுக்கப்படுவதிலிருந்து தொடங்குகிறது. அப்பொழுது தேவதூதன் நின்று, '' நீ எழுந்து, தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும்,அதில் தொழுதுகொள்ளுகிறவர்களையும் அளந்து பார்'' என்று யோவானிடத்தில் சொல்லுகிறார். எசேக்கியேல் 40-48 அதிகாரங்களில், ஒரு தரிசனத்தில், எசேக்கியேல் தீர்க்கன் இவ்விதமாகவே சொல்லப்பட்டான். கட்டிடமாக நின்ற தேவாலயம், இந்த புத்தகம் எழுதப்படுவதற்கு மிகவும் முன்பாகவே, அதாவது கி.பி.70-ல் அழிக்கப்பட்டபடியால், அதை யோவான் அளப்பதில்லை மாறாக, யோவான் புதிய ஏற்பாட்டில் தேவனுடைய ஆலயமாகிய, ஆவிக்குரிய ஆலயமாகிய, கர்த்தருடைய சபையை அளப்பார். (1.கொரி. 3:16,17; எபே.2:20-22; 1.பேதுரு. 2:4,5). எசேக்கியேல் புத்தகத்தில், உள்ள தரிசனத்தில் எசேக்கியேல் தேவாலயத்தை அளந்த நிகழ்ச்சியானது, எப்படி பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்கள், தேவனுக்கு உண்மையுள்ளவர்களாகவும், தங்கள் மத்தியில் வாசம் பண்ணுகிற தேவன் பரிசுத்தமாயிருப்பதுபோல தாங்களும் பரிசுத்த மாயிருக்க வேண்டுமென்றும் ஊக்கப்படுத்தும்படியாய் எழுதப்பட்டதோ (எசே.43:7-12) அதுபோல, சபையாகிய ஆலயத்தை யோவான் அளப்பது, இன்றைக்கு தேவனுடைய இஸ்ரவேலர்களாகிய கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. (ரோமர்.2:28,29 ; கலா.6:16) தேவன், நீதியையும், துன்மார்க்கத்தையும் வகைப்படுத்தி ''அளக்கிறார்'' (1.சாமு.8:1,2) தான் அளந்ததை அவர் பாதுகாக்கிறார். (சகரி. 2:1-5) இந்த அதிகாரத்தின் செய்தி என்னவெனில் நித்திய ஜீவனை சுதந்தரிக்கும் என்பது. ஆனால், ஆராதிக்கிறவர்களாகிய நாம், அளக்கப்பட்டு, உண்மையுள்ளவர்க ளென்று கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

இரண்டாம் வசனத்தில், ஆலயத்திற்குப் புறம்பே இருக்கிற பிரகாரம் ''புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டபடியால், அதை அளவாமல் புறம்பாக்கிப்போடு; பரிசுத்த நகரத்தை அவர்கள் நாற்பத்திரண்டு மாதமளவும், மிதிப்பார்கள்'' என்று யோவான் சொல்லப்படுகிறார். அங்கே, புறஜாதிகள், சரீரப்பிரகாரமான தேவாலயத்தின் உள்ளே, உள் பிரகாரத்தில் அனுமதிக்கப் படவில்லை. ஆனால், வெளிப்பிரகாரத்திற்கு செல்ல முடிந்தது. அதுபோலவே, ஆவிக்குரிய புறஜாதிகளும் (எபே.4:18-20; 1.பேதுரு.2:12; 3.யோவான் 7) சபையில் சேர்க்கப்படுவதற்கு முன்பாக, அவன் மனந்திரும்ப வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், அவன் ஆவிக்குரிய ஆலயத்தில் இருக்க முடியாது

(அப்.2:38-41,47) ஆனால், இந்த புறஜாதிகள் சபையை கண்டிப்பாக துன்பப் படுத்துவார்கள். பரிசுத்த நகரத்தை அவர்கள் நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப் பார்கள் என்று 11:2-ம் வசனம் கூறுகிறது. இந்தப் புத்தகம் எழுதப்பட்டபோது, ரோமர்களால், எருசலேம் அழிக்கப்பட்டாயிற்று.ஆகையால்,இது ஆவிக்குரிய பரிசுத்த நகரமாகிய சபையைத் தான் குறிக்கிறதென்பது வெளிப்படை (எபி.12:22,23). ஆகவே ''புறஜாதிகள்'' சபையை 42 மாதமளவும் மிதிப்பார்கள்.42 மாத கால அளவு 3 1/2 வருடங்களுக்கு சமம். இது, பூரண எண்ணாகிய ஏழில் சரிபாதி.ஆகவே, 3 1/2 என்பது, குறைவான, முழுமைய டையாத ஒன்றைக் குறிக்கிறது. இங்கே, இது, புறஜாதிகள் சபையை மிதிப்பார் கள்.ஆனாலும், அந்தத் துன்புறுத்துதல் முழுமையடையாது என்பதைக் காட்டு கிறது.அதாவது, சபைக்கெதிரான துன்புறுத்துதல், தற்காலிகமானதாக இருக்கும். அது, சபையை அழிப்பதில் வெற்றிகொள்ளாது. சபை நித்தியமானது (தானி. 2:44; மத்.16:18) புறஜாதிகளின் எல்லாத் துன்புறுத்துதல்களையும் மீறி, முடிவிலே வெற்றி காணும். என்ன அருமையான செய்தி இது!

வசனம் 3-6ல் தேவனுடைய ''இரண்டு சாட்சிகளின்'' வேலையை விவரிக்கிறது. தேவன் அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பார். அவர்கள் 1260 நாளளவும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். (11:3) இதுவும் 42 மாதங்கள் அல்லது 3 1/2 வருடங்களுக்குச் சமம். ஆகவே இந்த இரண்டு காட்சிகளும் புறஜாதிகள் சபையை மிதிக்கும். அந்த கால அளவுக்கு, தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். இது, தேவனுடைய வார்த்தைகளின் மத்தியிலும் பரவுமென்பதை, இதிலிருந்து நாம் உணரும் போது, அது நமக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கிறது. இந்த இரண்டு காட்சிகள் பற்றி 11:4 ''பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக,நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும், இரண்டு விளக்குத் தண்டும் இவர்களே'' என்று கூறுவது சகரியா நான்காம் அதிகாரத்திலுள்ளது போலுள்ளது. சகரியா,நான்காம் அதிகாரத்திலுள்ள இரண்டு ஒலிவமரங்களும், தேவாலயம் திரும்பக் கட்டுவதோடு சம்பந்தப் பட்டுள்ளது. (சக.4:9).வெளி. 11-ம் அதிகாரத்திலுள்ள, இந்த இரண்டு காட்சிகளும், கர்த்தருக்கு முன்பாக நிற்கிற ''இரண்டு ஒலிவமரங்கள்'' என்றும் அழைக்கப் படுகிறது.(சக.4:11-14;வெளி.11:4 ஒப்பிடவும்) சரீரப் பிரகாரமான தேவால யத்தைத் திரும்பக் கட்டுவதற்கு சகரியாவில் சொல்லப்பட்டுள்ள இரண்டு ஒலிவமரங்களும் (காட்சிகளும்) புறஜாதிகளின் துன்புறுத்தல் காலத்தில், ஆவிக்குரிய தேவாலயமாகிய சபையைத் திரும்பக் கட்டுவதற்காக உள்ளது. செருபாபேலுடைய, தேவாலயம் மனிதனாலே அல்ல, தேவனுடைய வல்லமையினாலே திரும்பக்கட்டப்படும் என்ற தேவனுடைய வாக்குறுதியை நினைவில் கொள்ளவேண்டும்.(சக.4:6-9) அதுபோலவே, அந்த நாட்களின் வேலைக்காக, தேவன் இரண்டு சாட்சிகளைப் பாதுகாப்பார். ''ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருந்தால், அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும். அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருக்கிறவன் எவனோ, அவன் அப்படியே கொல்லப்படவேண்டும்'' (வெளி.11:5)

தொடர்ந்து வசனம் 6, இந்த இரண்டு சாட்சிகளும், ''மழை பெய்யாதபடிக்கு வானத்தை அடைக்கவும், தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும் போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அதிகாரம் உடையதாயிருக்கும்'' என்று கூறுகிறது. அவர்களுடைய தீர்க்கதரிசன நாட்களில், மழையை நிறுத்தும் அதிகாரமானது, எலியாவோடு ஒப்பிடப்படுகிறது. (1.ராஜா 17:1,7; 18:1 யாக்.5:17). தண்ணீரை இரத்தமாக மாற்றும் அதிகாரம், மற்றும் தாங்கள் வேண்டும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கும் அதிகாரமான மோசேயுடன் ஒப்பிடப்படுகிறது. (யாத்.4-12 அதி) 5,6 வசனப்பகுதிகளில் சொல்லப்பட்டிருப்பதை சொல்லர்த்த ரீதியில் எடுத்துக் கொள்ளக்கூடாது. மாறாக, தன்னுடைய ஜனங்கள் மீது, தேவன் கொடுக்கும் வல்லமையான பாதுகாப்பை அடையாளப்படுத்துகிறது. உண்மையில், இரண்டு சாட்சிகள் என்பதை சொல்லர்த்த அடிப்படையில் இரண்டு மனிதர்களாகப் பார்க்கக்கூடாது. மாறாக, சபையின் வெற்றி, அதனை தொடர்ந்து வளர்ச்சி, கடுமையான துன்புறுத்தலுக்கு மத்தியிலும் சுவிசேஷம் பரம்பினதின் அடையாளமாகவே கருத வேண்டும். பதினொன்றாம் அதிகாரத்தின், இந்த பகுதி இச்செய்தியைத்தான் வலியுறுத்துகிறது. உபத்திரவத்திற்குள்ளாக்கப்படும் கிறிஸ்தவர்களை ஆறுதல் படுத்தும்படியாகவும், அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் படியாகவும், பழைய ஏற்பாட்டின் பகுதிகள் அடையாளமாக, வெளிப்படுத்தின விசேஷத்தில் திரும்பத் திரும்ப பயன்படுத்தப்பட்டிருப்பதை நாம் அடிக்கடி காணமுடியும். இங்கே, வெளிப்படுத்தல் எழுதப்பட்டதிற்குப் பிறகு, ரோமர்கள் இதைப் படித்து இதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளமுடிந்திருந்தால், கிறிஸ்த வர்கள் மீதான தங்கள் தாக்குதல்களை தீவிரப்படுத்தியிருப்பர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். வேத வசனங்களில் வேரூன்றியிருக்கிற இந்த அடையா ளங்கள், தேவனுடைய வார்த்தைகளைத் தெரிந்தவர்களுக்கு இது தெளிவான அளவில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும், அவிசுவாசிகளால் அறிந்துகொள்ள முடியாததாகவும் இருந்தது. ஆதிக்கிறிஸ்தவர்கள் போல நாமும் இந்த வார்த்தைகளின்மூலம் பெலப்படுத்தப்பட்டு, நம்பிக்கையூட்டப்பட வேண்டும்.

அடுத்த வசனங்கள் 7,8 ஆகியவை, கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தினிமித்தம் அனுபவிக்க வேண்டிய உபத்திரவங்களின் உண்மைத் தன்மையையும், (2.தீமோ.3:12) விசுவாசத்திற்காக கிறிஸ்தவர்கள் மரிப்பதையும் தேவன் சில சந்தர்ப்பங்களில் அனுமதிக்கிறார் என்பதையும் (மத்.10:21,22; அப்.7:59,60; 12:1,2; 26:10, வெளி. 2:10,13) விவரிக்கிறது.அந்த இரண்டு சாட்சிகளும் தங்கள் சாட்சிகளை முடிக்கும்போது தேவன் ''பாதாளத்தி லிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம் பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடும், அவர்களுடைய உடல்கள் மகா நகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும், எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையில்

அறையப்பட்டார்'' என்றார். இந்த ''மகா நகரம்'' ஆவிக்குரிய ரீதியில், சோதோம், எகிப்து, எருசலேம் போன்றது (அங்கே நம்முடைய கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார்) சோதோம் என்ற பெயர் ஒழுக்கக் கேட்டோடும், துன்மார்க்கத்தோடும் தொடர்புள்ள ஒரு பெயர். (ஆதி.18:20,21; 19:4-13;2 பேதுரு.2:6; யூதா.7) எகிப்து உலகப்பிரகாரமான சந்தோஷத்திற்குப் பெயர்போனது.(எபி.11:24-27) எருசலேம், தேவனுடைய தீர்க்கதரிசிகளை துன்பப்படுத்திக் கொலைசெய்த பட்டணம் (மத்.23:37;லூக்.13:33) ஆகையால் இந்த ''மகா நகரம்'' ஒழுக்கக்கேடு, உலக உல்லாசம், தேவனுடைய மனிதர்களைத் துன்புறுத்திக் கொலைசெய்தல் போன்றவற்றிற்கு மையமாக இருந்தது. இந்த நகரம் ரோமாபுரியாக இருக்க வாய்ப்புண்டு. ஏனெனில் இந்த விவரிப்புகள், இதற்கு மிகவும் பொருந்துகிறது. இன்றைக்கும் இதே சக்தி உலகத்தில் கிரியை செய்து கொண்டிருக்கிறது. ''இந்த உலகத்திலிருந்து வெளியே வருவது'' எல்லாக் கிறிஸ்தவர்களின் கடமையாயிருக்கிறது. (1.கொரி.6:14-18)

இரண்டு சாட்சிகளின் உடல்கள் மகா நகரத்தின் வீதிகளில் 3 1/2 நாள் வரைக்கும் புதைக்கப்படாமல் கிடக்கும். (வெளி.11:8,9) மீண்டுமாக, இந்த எண் முழுமையற்ற கால அளவோடு சம்பந்தப்பட்டுள்ளது. அதாவது, இந்த இரண்டு சாட்சிகளின் உடல்கள், அங்கே தற்காலிகமாகவே இருக்கும். இந்தவசனப்பகுதி, அவர்கள் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார்கள் என்றும் சொல்லுகிறது. (11:11) ''அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளை வேதனைப்படுத்தினபடியால் அவர்நிமித்தம் பூமியின் குடிகள் சந்தோஷப்படுவார்கள்'' (11:10) ஜனங்கள் தேவனுடைய வார்த்தைகளை வெறுத்தார்கள். ஆகவே, சத்தியம் அவர்களை வேதனைப்படுத்தியது. (யோவான் 3:19,20; 7:7) ஆனால், அந்த இரண்டு சாட்சிகளும் உயிர்த்தபோது, அவர்கள் பயந்தார்கள் (11:11) ''இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்கு போனால் அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள்'' (11:12) தேவனுக்கு உண்மையாக ஊழியம் செய்து, அவருடைய வார்த்தைகளைப் பிரசங்கித்து, மரணம் நேரிடும் அளவுக்கான பாடுகளுக்கு மத்தியில் அவருடைய சபை கட்டப்படுவதற்கு உதவிய இரண்டு சாட்சிகளின் உயிர்த்தெழுதலானது, உண்மையுள்ள எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் முடிவிலே கொடுக்கப்படும் நித்திய வெற்றியை அடையாளப்படுத்துகிறது. (1.கொரி.15; எபி.13:5,6; வெளி.2:10) ஆகவே, மனிதர்களும், அவர்களால் செய்யமுடியும் எந்தவொரு காரியத்திற்கும் நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. லூக்கா 12:4,5 வசனங்களில், கிறிஸ்து, ''என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன். சரீரத்தைக் கொலை செய்து,அதன்பின்பு அதிகமான ஒன்றும் செய்யத் திராணியில்லா தவர்களுக்குப் பயப்படாதிருங்கள். நீங்கள் இன்னாருக்குப் பயப்பட வேண்டுமென்று உங்களுக்கு காண்பிக்கிறேன். கொலைசெய்த பின்பு நரகத்திலே தள்ள

வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள். ஆம், அவருக்கே பயப்படுங்கள் என்று உங்களுக்கு சொல்லுகிறேன்'' என்று சொல்லுகிறார். அதற்கு மாறாக, தேவனையும், அவருடைய பிள்ளைகளையும் துன்புறுத்தும், தேவ பயமற்ற வர்களுக்கு நியாயத்தீர்ப்பு காத்திருக்கிறதென்று வெளி.11:13 காட்டுகிறது. ''அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே அந்த நகரத்தில் பத்திலொரு பங்கு இடிந்து விழுந்தது. மனுஷரில் ஏழாயிரம் பேர் பூமியதிர்ச்சியினால் அழிந்தார்கள்; மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்''. இது இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆபத்துக்களுக்கான இடைவேளையை நிறைவடையச் செய்கிறது. ''இரண்டாம் ஆபத்து கடந்து போயிற்று; இதோ, மூன்றாம் ஆபத்து சீக்கிரமாய் வருகிறது'' (வெளி.11:14).

வெளிப்படுத்துதல் ஆறாம் அதிகாரத்தில் ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவுக்குள் கொடுக்கப்பட்ட முதல் ஆறு முத்திரைகள் உடைக்கப்பட்டது. ஏழாம் அதிகாரம், ஒரு இடைவேளை போன்றது. பிறகு, எட்டாம் அதிகாரத்தில், ஏழாம் முத்திரை திறக்கப்படுதல், ஏழு எக்காளங்களையுடைய ஏழுதூதர்களைக் கொண்டு வந்தது. 8-ம் அதிகாரத்தில் முதல் நான்கு தூதர்கள் தங்கள் எக்காளங்களை ஊதினார்கள், கடைசி மூன்று தூதர்கள் தங்கள் எக்காளங்களை ஊதி, மூன்று ஆபத்துக்களைக்கொண்டுவந்தார்கள். இவைகளில் முதல்இரண்டு ஆபத்துக்கள், 9-ம் அதிகாரத்தில் ஐந்தாம் , ஆறாம் தூதர்களோடு வந்தது. வெளி.10:1-14;14 பகுதி ஒரு இடைவேளை போன்றது. பிறகு வெளி.11:15-19 வசனப்பகுதியில் இந்நூலில் ஆட்டுக்குட்டியானவர் மாத்திரம் திறப்பதற்கு அருகதையுள்ள, ஏழாவதும், இறுதியுமான தூதன்,ஏழாவதும் இறுதியுமான முத்திரைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது.15-ம் வசனத்தில், ''ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்றும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின'' வெளி.11:15 இந்நூலின் மிக முக்கியமானதொரு வசனம். சபையைப் பற்றியதான மகத்தானதொரு பாடத்தை இது போதிக்கிறது. தேவனுடைய ராஜ்யமான சபையானது, முடிவிலே ரோம் மீது வெற்றி கொண்டு, நித்திய காலமாக நிலைக்கும் என்பதே அது. சபையானது ஒருபோதும் அழிக்கப்படாது.(ஏசா.9:7; 52:1;54:9,10; 15-17; தானி. 2:44,45; 7:18-27; மத்.16:18,19; லூக்கா 1:31-33; எபே.3:10,11,21, எபி.12:28; 2பேதுரு 1:11)

வசனங்கள் 16,17-ல் '' அப்பொழுது தேவனுக்கு முன்பாகத் தங்கள் சிங்காசனங்களின் மேல், உட்கார்ந்திருந்த இருபத்துநான்கு மூப்பர்களும் முகங்குப்புறவிழுந்து; இருக்கிறவரும், இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்.தேவரீர் உமது மகா வல்லமையைக் கொண்டு ராஜ்யபாரம் பண்ணுகிறீர்,'' என்றுள்ளது.

தேவன் நித்தியமானவர். எல்லாம் அவர் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. துதிக்கும், ஸ்தோத்திரத்திற்கும் அவர் தகுதியானவர், உயிர்த்தெழுதல், மற்றும் நித்திய ஜீவன் மூலமாக தம்முடைய பிள்ளைகளுக்கு இறுதி வெற்றியைக் கொடுக்கிறவர்.

முதல் ஆறு எக்காளங்கள், துன்மார்க்கர் மீது, தேவனுடைய தற்காலிக நியாயத்தீர்ப்பைக் கொண்டுவந்தது. ஆனால், மூன்றாம் ஆபத்தும், ஏழாம் முத்திரையின் இறுதியும். நம்மை நியாயத்தீர்ப்பின் நாளுக்குக் கொண்டு வருகிறது. '' ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது. மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம் வந்தது என்று சொல்லி, தேவனை தொழுது கொண்டார்கள்.அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது. அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது. அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும் பூமியதிர்ச்சிகளும், பெருங்கல் மழையும் உண்டாயின'' (வெளி.11:18,19) உடன்படிக்கைப் பெட்டியின் அடையாளத்தை தேவன், இறுதி நியாயத்தீர்ப்புக்கு அடையாளமாக பயன்படுத்துகிறார். யோசுவா.6:1-7 வசனப்பகுதியில் எரிகோ அழிக்கப்படுவதற்கு முன்பாக, உடன்படிக்கைப் பெட்டியை தேவன் ஜனங்களுக்கு முன்பாக அனுப்பினார். அங்கே, தேவனுக்கு உண்மையுள்ள, கீழ்ப்படிதலான பிள்ளைகள் காப்பாற்றப்பட்டு, தேவனுக்கு விரோதமானவர்கள் அழிக்கப்பட்டார்கள். அதுபோலவே, வெளி,11:18,19ல் துன்மார்க்கர் மீதான இறுதி நியாயத்தீர்ப்புஅவர்களின் நித்திய அழிவுக்கு முன்னதாக உடன்படிக்கைப் பெட்டி, உருவகமாக தேவனுடைய ஆலயத்தில் உள்ளது. அந்த இறுதி நியாயத்தீர்ப்பை, தேவனுடைய உண்மையும், கீழ்ப்படிதலுமுள்ள பிள்ளைகள் மேற்கொள்வார்கள். இந்த மூன்றாம் ஆபத்தானது, உலகத்தின் முடிவு, நியாயத்தீர்ப்பின் நாள், இறுதி பலன் மற்றும் தண்டனையாகும்.

**Jon Macon** **EZSR**



## பழைய ஏற்பாடு இன்று சபையைக் கட்டுப்படுத்தும் பிரமாணமல்ல, மாறாக அது நமக்கு போதனையாக மாத்திரமே எழுதப்பட்டுள்ளது.

வேதப்புத்தகத்தைச் சார்ந்த நாம் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களாகிய நாம், வேதாகமத்திலுள்ள ஏவப்பட்ட எழுத்துக்களை ஆழமாக மதிக்கிறோம். வேத வாக்கியங்களெல்லாம் உபதேசத்திற்கும் கடிந்து கொள்வதற்கும், சீர் திருத்தலுக்கும் நீதியை படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கின்றன. (2.தீமோ. 3:16,17).

ஆயினும், இன்று பழைய ஏற்பாட்டிற்கும் சபைக்கும் உள்ள தொடர்பை நாம் அறிய வேண்டிய ஒரு காரியமாகும். இக்கட்டுரை இதன் எதிர்மறை நேர்மறைக் காரியங்களை குறித்துப் பேசுகிறது.

1. பழைய ஏற்பாடு சபைக்காக (சபையைக் கட்டுப்படுத்தக்) கொடுக்கப்பட்ட கட்டளையல்ல.

யூத மார்க்கத்து அபிமானிகள் (அனுதாபிகள்) பவுல் காலத்தில் பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் சபையைக் கட்டுப்படுத்துவதாகக் காட்டிக் கொள்ள விழைந்தனர்.(கலா.2:1-5)இன்றைய மார்க்கப்பிரிவினரான ஏழாம் நாள் ஆசரிப்புக் கூட்டத்தார் போன்றவர்கள் பழைய ஏற்பாட்டின் சில பாகங்கள் கிறிஸ்தவர்களை கட்டுப்படுத்துவதாகக் காட்டிக் கொள்ள வகை தேடுகின்றனர். வித்தியாசப்பட்ட அநேக மக்கள் நமக்கும் பழைய ஏற்பாட்டிற்குமுள்ள தொர்டர்பைக் குறித்து தயக்கமான (தெளிவற்ற) கேள்விகளை எழுப்பிக்கொண்டுள்ளனர்.

பின்வரும் வசனங்கள் இன்றைய தேவனுடைய ஜனங்கள் பழைய ஏற்பாட்டின் அதிகாரத்திற்கு கீழானவர்களல்ல என்பதை தெளிவாக்குகிறது.

1. பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் குறிப்பாக யூதர்களுக்கு கொடுக்கப்பட்டதேயன்றி கிறிஸ்தவர்கள் உட்பட வேறு யாருக்கும் கட்டளையாகக் கொடுக்கப் படவில்லை. தேவன் மோசேயினிடத்தில்,''... இந்த வார்த்தைகளின்படியே உன்னோடும் இஸ்ரவேலோடும் உடன்படிக்கைப் பண்ணினேன் என்றார்'' (யாத்.34:27). ''இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் ஓய்வு நாளை நித்திய உடன்படிக்கையாக ஆசரிக்கும்படி அது என்றென்றைக்கும் எனக்கும் (தேவனுக்கும்) இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்'' (யாத்.31:16,17). தேவன் மோசேயின் நாட்களிலிருந்த யூதர்களோடு மோசேயின் (பிரமாணத்தை) உடன்படிக்கையைச் செய்தாரேயல்லாம், மற்றவர்களோடு செய்யவில்லை.(உபா.5:1-3; நெகேமியா. 9:13,14)

2. பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் தற்காலிகமானதும் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டிய ஒன்றாகவுமிருந்தது. எரேமியா முன்னுரைத்த இதை

எபிரேய எழுத்தாளர் அதன் நிறைவேற்றத்தை உறுதிப்படுத்துகிறார். (எரே.31:31-34; எபி.8:6-13). மோசேயின் உடன்படிக்கையிலிருந்து வித்தியாசப்பட்ட ஒரு உடன்படிக்கை கொடுக்கப்படும் என்பதை தேவன் குறிப்பிட்டார். இதன் நிறைவேற்றத்தைத்தான் எபிரேய எழுத்தாளர் சுட்டிக் காட்டுகிறார். மேலும் அந்த எபிரேய எழுத்தாளர் காலத்தில் பழைய ஏற்பாடு '' உருவழிந்து போகும் காலம் சமீபமாயிருக்கிறது'' என்றும் (எபி.8:13) ''... நியாயப் பிரமாணமும் மாற்றப்படவேண்டியதாகும்'' என்றும் (எபி.7:12) அவர் விளக்கப் படுத்துகிறார்.

3. தேவனுடைய மக்களை வழிநடத்தும்படியாய்க் கொடுக்கப்பட்ட பழைய ஏற்பாடு கிறிஸ்துவுடனே கூட சிலுவையிலே அறையப்பட்டு ஒரு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. பவுல் கூறுகையில், கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டு '' பிரமாணத்துக்கு மரித்தவர்கள்'' என்றும் அந்தப் பிரமாணம் ''இச்சியாதிருப்பாயாக'' என்று கூறப்பட்ட பிரமாணம் அதாவது பத்துக்கட்டளைப் பிரமாணம் என்றும் கூறுகிறார்.(ரோமர்.7:4) மேலும் பழைய ஏற்பாட்டின் கீழ் நியாயப்பிரமாணம் வாசிக்கையில் எடுக்கப்படாமலிருந்த முக்காடு, இப்பொழுது அது கிறிஸ்துவினாலே நீக்கப்படுகிறது.(2.கொரி.3:11,14). கிறிஸ்து ''சட்ட திட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்தார்'' (எபேசியர் 2:11,15,16). உண்மையில், '' .... கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து விட்டார்'' (கொலோ.2:14).

எனவே விளைவு என்னவெனில், தேவனுடைய மக்களுக்கென்று கொடுக்கப்பட்ட பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் கிறிஸ்துவின் மரணத்தால் எடுபட்டுப் போயிற்று. ஆதலால் கிறிஸ்தவர்கள், தேவனுக்கு செய்யும் ஆராதனையிலும் ஊழியத்திலும் பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தை இன்று கை கொள்ள வேண்டுவதில்லை.

பழைய ஏற்பாடு இன்று நடைமுறையில் அமுலாக்கப்படவேண்டியதாயி ராவிடினும், கிறிஸ்தவர்களுக்கு அன்றாட வாழ்க்கைக்கு ஒரு திருஷ்டாந்தமாக மதிப்புக்கொண்டுள்ளது.

இன்று பழைய ஏற்பாட்டை கை கொள்ள வேண்டிய முறையை விளக்கும் இரண்டு சிறந்த வசனப் பகுதிகள் ரோமர். 15:4-ம் 1.கொரி.10:11-ம்ஆகும். இந்த வசனங்களில் பழைய ஏற்பாடு நமக்கு '' போதனையாக'' ''திருஷ்டாந்தமாக'' ''எச்சரிப்புண்டாகும்படியாக'' ''பொறுமையும் ஆறுதலையும்'' பெறும்படியான பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.

1. நாம் கற்றுக்கொள்ள ஏதுவாக பழைய ஏற்பாடு ஏராளமான குறிப்புகளைத் தன்னுள் கொண்டுள்ளது. இவைகள் (அ) உலகத்தோற்றம் (ஆதி. 1:1;சங்கீதம்.33:6,9) மனிதனின் தோற்றம் மற்றும் தன்மை (ஆதி.2:7; சகரியா.12:1) பாவத்தின் தோற்றம் (ஆதி.3:1-6) போன்றவற்றை குறித்து அடிப்படைக்

கேள்விகளுக்கு பதிலளிக்கிறது. (ஆ) ஆபிரகாம் துவங்கி பழைய ஏற்பாட்டின் இறுதிவரை வாழ்ந்த யூதர்களின் வரலாற்றின் மூலம் புதிய ஏற்பாட்டை நாம் புரிந்து கொள்ள ஏதுவான (தேவையான) தகவல்களைப் பழைய ஏற்பாட்டிலிருந்து பெற்றுக்கொள்கிறோம். புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள யூதர்களின் நிகழ்ச்சிகள், நடவடிக்கைகள் மற்றும் ஆசாரிப்புகளான பஸ்கா, பெந்தெகொஸ்தே, பண்டிகை, ஓய்வு நாள், இரத்தஞ் சிந்துதல் போன்ற காரியங்களை பழைய ஏற்பாட்டிலிருந்து கற்றுக்கொள்கிறோம். புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள சில நபர்களின் வாழ்க்கை வரலாற்றை பழைய ஏற்பாட்டிலிருந்து அறிந்து கொள்கிறோம். அதாவது எலியா (மத்.17:1-9), மோசே (யோவான்.1:7), ஆதாம், ஏவாள் (1.தீமோ.2:12-15) போன்ற நபர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிகிறோம். மேலும் பூகோள ரீதியான எருசலேம், யோர்தான், சமாரியா, போன்ற இடங்களையும் பழைய ஏற்பாட்டிலிருந்து கற்றுக்கொள்ளுகிறோம். புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள சில நபர்களின் வாழ்க்கை வரலாற்றை பழைய ஏற்பாட்டுலிருந்து அதிகமாக அறிகிறோம். இப்படிப்பட்ட புதிய ஏற்பாட்டில் கூறப்பட்ட துணுக்குகள் தகவல்கள் பழைய ஏற்பாட்டு மூலமாய்,தெளிவாக்கிக் கொள்கிறோம்.

(இ) முக்கிய தகவல்களை இயேசு கிறிஸ்துவையும் வாழ்க்கை வரலாறையும் அவருடைய வம்சா வழிபோன்றவைகளையும் அறிந்துக் கொள்கிறோம். (மத்.1; லூக்கா.3) அவரது வருகை குறித்துக் கூறப்பட்ட தீர்கதத் தரிசனங்கள் (சங்.16:8-10; ஏசாயா.53) காளை,வெள்ளாட்டுகடா ஆகியவற்றின் இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்ய தவறிய காரியத்தையும் (எபி.10:1,2) அவசியமாக தெரிந்துக்கொள்ளவேண்டிய வார்த்தைகளான பாவம் நீதி, பரிசுத்தம், ஜெபம் போன்றவைகளையும் பழைய ஏறபாட்டிலிருந்து அறிகிறோம். இப்படியாக இயேசுவைக்குறித்தும் அவரது வழியை குறித்தும் அறிந்துகொள்ளும் "போதனையாக" நமக்கு பழைய ஏற்பாடு அமைந்துள்ளது.

(2) பழைய ஏற்பாடு அநேக புத்திசொல்லுதலைக்கொண்டு மனிதனை வழிநடத்தவும் எச்சரிக்கவும் செய்கிறது. இவைகள் (அ) மனிதனின் பெலவீனத்தையும் இருதயத்தையும் கட்டுப்படுத்துவதையும் குறித்து புத்திசொல்லி (;நீதி4:23) பொறாமையின் அபாயம் (நீதி.6;34,35) இச்சித்தல் (யாத்.20:17) போன்றவைகளையும் சுட்டிக்காட்டி போதிக்கிறது. யோசுவாவைகுறித்தும் (யோசு.7:1) "மனிதனைக்கொல்லும் பாவங்களைக்" குறித்தும் (நீதி:6:16-19)எச்சரிக்கிறது.

ஆ) தேவனுக்கு கீழ்ப்படிதலின் அவசியம் மற்றும் எபிரேயர் 11-ல் கூறப்பட்டுள்ள கீழ்ப்படிதலின் உதாரணங்களை குறித்த அறிவுரை, எரிகோவில் யோசுவா, நாகமான் நோவா போன்றவர்களைக் குறித்த அறிவுரைகளை அறிகிறோம்.

இ) தாவீதின் பாவம் (2.சாமு.11: சங்.51) சவுல் (1.சாமு.15) நாதாப் அபியு (லேவி.10) பிலேயாம் (எண்.22) போன்ற உதாரணங்கள் மூலம் அநீதிகளுக்கு விரோதமான தண்டனைகளின்பொருளை அறிவுறுத்தவதாக காண்கிறோம். இந்த அறிவுரைகளையும் பழைய ஏற்பாட்டில் கற்பதன் மூலம் முறையானஆராதனை மற்றும் தேவனுடைய மக்களிடத்தில் இருக்க வேண்டிய நடத்தைகளுக்கான உதாரணங்களை அறிந்துக்கொள்ளுகிறோம்.

நமது பொறுமைக்கும் ஆறுதலுக்கும் அநேக வழிகளை பழைய ஏற்பாடு நமக்கு அளிக்கிறது. தேவன் தமது ஜனங்கள் மீது அக்கறை காட்டி காத்துக்கொள்வதை குறித்த அநேக வரலாறுகளை நாம் பழைய ஏற்பாட்டில் வாசித்து அறியலாம் (சங்:23; 27;103;127 போன்ற அதிகாரங்கள்) மேலும் தமது தாசர்களான யோபு (யோபின்புத்தகம்) தாவீது (சங்.37:25,26)யோசுவா (யோசுவா.1:5-9) போன்றவர்களை காத்துக்கொண்ட தேவனின் குணாதி சயங்களையும் அறிகிறோம். அடிக்கடி பாவம் செய்து வீழ்ந்துபோன யூதா தேசத்தாரும் தேவன் தமது அக்கறையை காட்டியதன் மூலம் நமக்கும் தேவன் இன்று அளித்துள்ள தயவுகளை அறிந்துகொள்கிறோம்.

எனவே பழைய ஏற்பாடு ஒரு பிரமாணமான அதன் நோக்கத்தை செயல்படுத்தி கிறிஸ்துவின் மரணத்தால் அதிகாரபூர்வமாக நிறைவேற்றப்பட்டு பிறகு நீக்கப்பட்டிருப்பதால் இன்றுள்ள தேவனுடைய ஜனங்களை கட்டுப்படுத்தும் கட்டளையாக நாம் அதை காணக்கூடாது. ஆயினும் பழைய ஏற்பாடும் தேவனால் ஏவப்பட்ட புத்தகமாக,பொக்கிஷமாக இருக்கிறபடியால் அது நமது போதனைக்கும் படிப்பிக்குதலுக்கும் பொறுமைக்கும்,ஆறுதலுக்கும் தேவையான வற்றை விளக்கப்படுத்தும் புத்தகமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

**E.A. ஆறுமுகம்.**

## வேதாகமம் என்றென்றும் அழியாதது

*வால்டயர்(**Valtaire**) என்பவன் ஒரு தெய்வ பக்தியற்ற கொடுமையான பிரெஞ்சு மனிதன். கி.பி. 1778ம் ஆண்டு, இன்னும் நூறு ஆண்டுகளில் வேதாகமம் என்ற ஒன்று இப்புவியில் இராது எனக் கூறி புளகாங்கிதம் அடைந்தான். ஆனால் நூறு ஆண்டுகளுக்குள் அவன் மரித்தான். அவன் அறைகூவல் விடுத்த செய்தியை அச்சிட்ட அதே பதிப்பகத்தில் வேதாகமம் அச்சிடப்பட்டது. அவன் வாழ்ந்த வீட்டை "ஜெனீவா வேதாகம சங்கம்" வேதாகமத்தை பாதுகாப்பாக வைக்கப் பயன்படுத்தினார்கள். அங்கிருந்து பல இடங்களுக்கு வேதத்தை வினியோகம் செய்யும் மையமாக அவ்வீட்டை மாற்றினார்கள்.*


வானமும், பூமியும் ஒழிந்தாலும் வேத வார்த்தைகள் ஒழியாது. ஒழியவே ஒழியாது. *(மத்.5:18)*

# நடப்புச் செய்திகள்

- ❖ குஜராத்தில் நிகழ்ந்த பயங்கர பூகம்பத்தால் ஏற்பட்ட இழப்பு 25,000 கோடி ரூபாய் மதிப்பாக இருக்குமென்று கணக்கிடப்பட்டுள்ளது.
- ❖ பூகம்பத்தால் லட்சம்பேர் மரித்திருக்கக் கூடுமென்று அஞ்சப்படுகிறது.
- ❖ சிறுபான்மையினருக்கு எதிராக செயல்பட்டதால் தான் குஜராத்தில் பூகம்பம் ஏற்பட்டது என்றும், இது கடவுள் கொடுத்த தண்டனை என்றும் சொன்ன கர்நாடக மந்திரி **ஜான்** ராஜினாமா செய்ய நேர்ந்தது.
- ❖ பா.மா.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், திமுக கூட்டணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளார்.
- ❖ த.மா.கா. **தலைவர் மூப்பனார்** எங்கே சாய்கிறாரோ, அக்கூட்டணிதான் வெற்றி பெறும் என்ற நிலை, சமீப அரசியல் மாற்றங்களால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது.
- ❖ சோனியா காந்தியை எதிர்த்து, காங்கிரஸ் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட காங்கிரஸ் மூத்த தலைவர் **ஜிதேந்திர பிரசாத்** காலமானார்.
- ❖ இஸ்ரவேல் நாட்டுத் தேர்தலில் வலது சாரி கட்சியைச் சேர்ந்த **அரியல் ஷரான்** வெற்றி பெற்றார்.
- ❖ பெங்களூரில் நடந்த விமானக் கண்காட்சியில் 19 நாடுகள் பங்கேற்றன.
- ❖ வீரப்பனைத் தேடும் பணி இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாக அதிரடிப்படைத் தலைவர் கூறியுள்ளார்

# விளையாட்டுச் செய்திகள்

1. ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில், ஜெனிஃபர் கேப்ரியாட்டி சாம்பியன் பட்டத்தை வென்றார்.
2. ஆஸ்திரேலியாவை எதிர்கொள்ளும் தொடருக்கு ஆயத்தமாகிறது இந்திய கிரிக்கெட் அணி. வீரர்கள் கடும் பயிற்சி. காயம் காரணமாக கும்ளே இத்தொடரில் விளையாடவில்லை.
3. குஜராத் நிவாரண நிதி காட்சிப் போட்டி, ஷார்ஜாவில் பாகிஸ்தானுடன் விளையாட இந்திய கிரிக்கெட் அணிக்கு அனுமதி மறுப்பு.
4. பான் - பசிபிக் ஓபன் டென்னிஸ் டேவின் போர்ட் சாம்பியன் பட்டத்தை வென்றார்.
5. கிரிக்கெட் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகளிலிருந்து நிகில் சோப்ரா விடுவிக்கப்பட்டார்.
6. சென்னையில் மகளிர் தேசிய குத்துச்சண்டை போட்டி பிப்ரவரி 6-ம் தேதி தொடங்கினது.
7. தொழில் முறை டென்னிஸ் போட்டிகளில் மீண்டும் களமிறங்குகிறார் மார்ட்டினா நவரத்திலோவா.
8. இங்கிலாந்திற்கு எதிரான 19 வயதுக்குட்பட்ட வர்களுக்கான முதல் கிரிக்கெட் டெஸ்டில் இந்திய அணி வெற்றி பெற்றது.
9. பள்ளிக்கல்வியில் விளையாட்டை கட்டாயப் பாடமாக சேர்த்தாலே திறமைமிக்க விளையாட்டு வீரர்களை உருவாக்க முடியும் என்று இந்திய வாலிபால் சம்மேளனத்தின் தலைவர் கூறியுள்ளார்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45 - 6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT<br>RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***
***Magazines and other Christian Literatures***

**ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST**

Designed by : Aarthi Computers 811-Brough Road, Erode-1.

REGISTERED NEWS PAPER RNI No. 47661 / 87 - NEW DELHI

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்

கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு

செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில்

நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி.

இப்பயிற்சியை வெற்றிகரமாக

முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,

அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,

த.பெ.எண் - 27, காங்கேயம் - 638 701. தமிழ்நாடு, இந்தியா.

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : S.RAJANAYAGAM,